# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12






புத்தகம் 18 | திருவள்ளுவர் ஆண்டு 1996 பங்குனித் திங்கள் 8-ம் நாள் (21—3—1965) ஞாயிற்றுக்கிழமை துல்கஃ 17 | இதழ் 43


# தமிழரசு வேட்பாளர்கள் 20 பேர்களையும் தெரிவு செய்க!

## தமிழ், முஸ்லிம் வாக்காளருக்கு தமிழரசுத்தந்தைவேண்டுகோள்

**"தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய சுதந்திர உரிமைக் கோரிக்கை வலுப்பெற தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்து, தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் 20 பேரையும் ஒருவர்தானும் பாக்கியில்லாது வெற்றி பெறச் செய்யும் வண்ணம் வேண்டுகிறேன்"**

பொதுத் தேர்தலையொட்டி தமிழரசுத் தந்தை திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் தமிழ் பேசும் வாக்காளர்களுக்கு சுதந்திரன் மூலம் விடுத்த ஒரு விசேட வேண்டுகோளில் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும் அவர் தமது வேண்டுகோளில் கூறியிருப்பதாவது:

'இத் திங்கள் 22ம் நாள் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல் இந்நாட்டின் வரலாற்றில் அதிமுக்கியத்துவம் வாய்ந்ததென்பதில் எள்ளத்தனையும் சந்தேகமில்லை. பெரும்பான்மை மக்களாகிய சிங்களச் சகோதரர்கள் இடதுசாரிக் குழுவினரா, வலதுசாரிக் குழுவினரா அதிகாரப்பொறுப்பை ஏற்பது என்ற பலப்பரீட்சையாக இத்தேர்தலைக் கருதுகிறார்கள். ஆனால், தமிழ் பேசும் மக்களாகிய எமைப் பொறுத்தவரையில் இவ்வதிகாரப் போட்டியில் பங்கற்றவர்களாக, ஓர் அடிமையினமாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே நாம் இத்தேர்தலை அணுகும் முறையே வேறு. எமது சுயநிர்ணய சுதந்திர உரிமையை நிலைநாட்டும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஓர் மாபெரும் பொதுமக்கள் வாக்கெடுப்பாக—எமது உரிமைப் போராட்டத்தின் ஓர் அங்கமாக நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலை நாம் அணுகவேண்டும்.


### கட்டுப்பாட்டின் அவசியம்

'அதே நேரத்தில் சிங்களச் சகோதரர்கள் மத்தியில் நடைபெறும் இந்த அதிகாரப் போட்டியின் பயனாகத் தமிழ் பேசுமினத்தின் தலைவிதியை மாற்றியமைக்கும் சந்தர்ப்பமும் இத்தேர்தலின்பின் கிடைக்கும் என்று எதிர்பார்க்கக்கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. இந்த நேரத்தில் தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகள் கட்டுப்பாடான ஒரு கட்சியாகத் தெரிவுசெய்யப்பட வேண்டியது அத்தியாவசியமாகும்.

'ஒரே குரலில் நமது சுயநிர்ணய சுதந்திர உரிமைக் கோரிக்கையை வலியுறுத்த தமிழ் பேசும் மக்கள் ஒரு கொடியின் கீழ் திரண்டு அணிவகுத்து விட்டார்கள் என்பதை நாட்டின் ஆட்சிப் பொறுப்பை யேற்கும் ஆட்சியாளருக்கு மட்டுமல்ல, உலக அரங்கிற்கும் எடுத்துக் காட்ட வேண்டும்.

'ஆனால், தமிழ் பேசும் மக்களின் ஒத்துழைப்பின்றி நிலையான ஒரு ஆட்சியை இந்நாட்டில் ஏற்படுத்த முடியாது என்பதை இலங்கைத் தமிழரசுக்கட்சி தமிழ் பேசும் மக்கள் சார்பில் இந்நாட்டு ஆட்சியாளருக்கும், சிங்களச் சகோதரர்களுக்கும், உலக அரங்கிற்கும் இரு தடவைகள் பட்டவர்த்தனமாக எடுத்துக் காட்டி விட்டது. நிலையான ஆட்சியை இந்நாட்டில் ஏற்படுத்த வேண்டுமெனில் எமது சுயநிர்ணயசுதந்திர உரிமையை வழங்கியே ஆகவேண்டும் என்ற நிலை தவிர்க்க முடியாததாகி விட்டது என்பதைப் பலரும் உணருகிறார்கள்.

'தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய சுதந்திர உரிமைக் கோரிக்கை வலுப்பெற தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்து, தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் 20 பேரையும் ஒருவர்தானும் பாக்கியில்லாது வெற்றி பெறச் செய்யும் வண்ணம் வேண்டுகிறேன்.



வாக்குரிமை

'தமிழரசுக் கட்சி வேட்பாளர்களின் சாதாரண வெற்றி ஒரு பொருட்டல்ல. பொது மக்கள் வாக்கெடுப்பில் அமோகமான விகித அதிகப்படி வாக்குகள் கிடைக்க வேண்டும். ஆகவே, வாக்காளர் பட்டியலிலுள்ள ஒவ்வொரு புனித வாக்கும்

(9-ம் பக்கம் பார்க்க)

# தமிழரசார் ஆதரவு எவருக்கு?

தமிழரசுக் கட்சிக்கு எத்தனை ஸ்தானங்கள் கிடைக்கப் போகின்றன, ஆட்சி பீடத்தைக் கைப்பற்ற தமிழரசாரின் உதவியைப் பெறுவதானால் தமிழ் பேசும் மக்களின் எவ்வெவ்வுரிமைகளைக் கொடுப்பது என்பன போன்ற வினாக்கள் தென்னிலங்கையிலுள்ள சிங்கள அரசியல் வாதிகளிடம் மும்முரமாக எழுந்திருப்பதாக அவதானிகள் கூறுகின்றனர்.

நிலையான ஒரு கொள்கைத் திட்டத்தை தமிழ் பேசும் மக்கள் மத்தியில் வைத்து கடந்த 1952-ம் ஆண்டு தேர்தலில் பிரவேசித்தது தமிழரசுக் கட்சி. படிப்படியாக அமோகமான ஆதரவு பெற்று வருவதனால் இம்முறை கடந்த முறைகளைவிட அதிகமான இடங்களை தமிழரசார் கைப்பற்றுவர் என்று தென்னிலங்கையிலுள்ள சகல அரசியற்கட்சிகளும் கருதுகின்றன. முன்பெல்லாம் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளாகசட்டசபைக்குள் பிரவேசித்தவர்களை அமைச்சர் பதவியைக் கொண்டோ வேறு ஆசை வார்த்தைகள் மூலமாகவோ ஏக சிங்கள தலைமையை ஏற்க வைக்க முடிந்தது.

தமிழரசுக் கட்சியை இந்த ரீதியில் அடிமைப் படுத்த முடியாமையினால் அவர்கள் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் செல்வாக்குக் குன்றுமலிருப்பது இயற்கையே.

யு. என். பி. கட்சியோ சுதந்திரக் கட்சியோ இம்முறை சம்பூரண பெலத்துடன் ஆட்சி அமைக்க முடியாது போகும் என்று அரசியல் அவதானிகள் கருதுவதனால் தமிழரசுக் கட்சியின் ஆதரவைப் பெறக் கூடிய கட்சியே அடுத்த ஆட்சியைக் கைப்பற்றும் என்பதுண்மை. இந்த உண்மை தெரிந்ததனால் இவ்விரு கட்சிகளும் தமிழரசாரை அணுகுவதற்கு எத்தனங்களைச் செய்து வருகின்றனர் என்று தெரிகிறது.

அற்ப சொற்ப சலுகைகளையோ அமைச்சர் பதவிகளையோ தமிழரசுக் கட்சி ஏற்கப் போவதில்லை என்று அவதானிகள் பெரிதும் நம்புகின்றனர். இதனால் தமிழரசுக் கட்சியை அணைத்து ஆட்சியை ஏற்படுத்த முற்படும் எந்த ஒரு கட்சியும் தமிழரசுக் கட்சி கோரும் நியாயமான கோரிக்கைகளுக்கு இணக்கம் தெரிவித்தேயாக வேண்டும். ஆகவே, தமிழ் பேசும் மக்கள் இழந்து போன உரிமைகளை மீண்டும் பெற அரியதொரு வாய்ப்பு இத்தேர்தலின் பின்னர் ஏற்படப்போவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## 'எதிர்க் கட்சித் தலைவராவது நிச்சயம்'

புதிய பாராளுமன்றத்தில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. செல்வநாயகம் எதிர்க் கட்சித் தலைவராவார் என்று "சட்டன" (போராட்டம்) என்னும் சிங்கள வாரப் பத்திரிகை (17-3-65) எழுதியுள்ளது.

"செல்வநாயகம் எதிர்க் கட்சித் தலைவராவார்" என்று தலைப்பிட்டு, முதற் பக்கத்தில் முதற் செய்தியாக வெளியிட்டுள்ள இச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"1956ல் ஏட்டிக்கு வீழ்ச்சியுற்றதைப் போல இம்முறையும் இருகைகளிலுள்ள விரல்களின் எண்ணிக்கையையும் விட குறைவான இடங்களையே கைப்பற்ற விருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியைத் தாழ்த்தி, திரு. செல்வநாயகம் எதிர்க் கட்சி தலைவராவது நிச்சயமாகும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# தமிழர் பிரச்சினைகளும் தமிழரசுக் கட்சியும்

## சமஷ்டி ஆட்சி சாத்தியமானதா?

## விளக்கம் தரும் வினு-விடை

**இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் எவை என்பதனைக் கூறி அப் பிரச்னைகள் தீர்ந்து தமிழ் பேசும் மக்கள் சிங்கள மக்களுடன் சரிநிகர் சமானமாக வாழ ஏற்ற வழி வகைகள் எவை என்பதனை விளக்குமுகமாக இவ் வினு விடைகளைத் தயாரித்தளிக்கிருர் திரு. கரிகாலன்.**

கேள்வி: தமிழ் பேசும் மக்களின் தலையாய அடிப்படைப் பிரச்சினைகள் யாவை?

விடை: அவை மூன்று கூறும்.

(அ) மொழிப்பிரச்சினை,

ஆண்டாண்டுகாலமாக சிங்கள மொழியுடன் சமவுரிமை அனுபவித்த தமிழ் மொழி சிங்களம் மட்டும் சட்டத்தால் இரண்டாந்தர மொழியாக்கப்பட்டுள்ளது.

(ஆ) சிங்களக் குடியேற்றப் பிரச்சினை—

தமிழ் மாநிலத்தில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்தால் தமிழ் மண் ஆக்கிரமிக்கப்படுகிறது.

(இ) மலைநாட்டுத் தமிழர் பிரச்சினை—

இந்நாட்டுத் தமிழ் பேசும் மக்களில் பாதிப்பங்கினர் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டு அரசியல் அனுதைகளாக்கப்பட்டுள்ளனர்.

கேள்வி: மேலெழுந்த வாரியாக மொழிப் பிரச்சினை தமிழ் பேசும் மக்களை எங்ஙனம் பாதிக்கிறது?

விடை: (அ) இந்நாட்டில் சகல உரிமைகளையும் அனுபவித்த பூர்வீகக்குடிகளான தமிழ் பேசும் மக்கள் சகல துறைகளிலும் இரண்டாந்தரக் குடிகளாக்கப் பட்டுள்ளனர். (ஆ) சகல துறைகளிலும் சிங்கள இனம் எம்மிலும் மேம்பட்ட அந்தஸ்தையும் வசதிகளையும் பெறுகிறது. (இ) தமிழ் பேசுமினம் விவரிக்கவொண்ணுத வசதிக் குறைவுகளை அனுபவிக்கிறது. (ஈ) தமிழ் பேசும் இனம் அவமானப் படுத்தப்படுகிறது.

கேள்வி: சிங்களக் குடியேற்றப் பிரச்சினை தமிழ் பேசும் மக்களை எவ்விதம் பாதிக்கிறது?

விடை: (அ) பரம்பரை பரம்பரையாக தமிழ் பேசும் மக்கள் ஆண்ட, வாழ்ந்த தமிழ் மாநிலம் சிங்களமயமாகியது (உதாரணம்: பட்டிப்பளை, கந்தளாய், ...லை, பதவிக் குளம், பாவற்குளம்)

(ஆ) தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவரும் தேர்தலுக்கு நிற்கவும், வெல்லவும் கூடியளவுக்கு எண்ணிக்கை பலம் பெற்றனர். (உதாரணம்: அம்பாறை, மூதூர், திருகோணமலை, வவுனியா.)

கேள்வி: நிலமழிந்தால் இனமழிந்துவிடும் என்பதற்கு உதாரணம் தருக.

விடை: நீர்கொழும்பு, சிலாபம் போன்ற சிங்களப் பகுதிகளைச் சார்ந்த தமிழ் மக்கள் பெர்ணுண்டோக்களாகவும் பெரேராக்களாகவும் மாறி, சிங்களப் பண்புகளைக் கைக் கொண்டு, சிங்களத் தமிழ் பேசும் சிறுமை.

கேள்வி: மலைநாட்டுத் தமிழர் பிரச்னையின் தன்மை என்ன?

விடை: (அ) இந்நாட்டின் தமிழ் பேசும் மக்களில் பாதிப் பங்கினர்-சுமார் எட்டு லட்சம் பேர்—குடியுரிமையையும் வாக்குரிமையையும் இழந்தனர். இதனுல்...

(ஆ) தமிழ் பேசும் மக்கள் தங்கள் எண்ணிக்கை பலத்தை அரசியல் ரீதியில் இழந்தனர். இதனுல்...

(இ) இன்று எம்மோடு பாராளுமன்றத்தில் வீற்றிருக்கக் கூடிய சுமார் பதினைந்து தமிழ்ப் பிரதிநிதிகளை இழந்துள்ளோம்.

(ஈ) இந்நாட்டின் வருமானத்தில் 65 சதவீதத்தை உழைத்துத் தருகின்ற தமிழ்த் தொழிலாளி அரசியல் செல்வாக்கற்றமையால், மிருகத்திலும் கேவலமாக நடாத்தப்படுகிருன்; மிலேச்சர்களிலும் கேவலமான வாழ்க்கை நடாத்துகிருன்.

(உ) இந் நாட்டின் பொருள் வளத்திற்கு முதுகெலும்பு போன்றவனது உரிமைகளைப் பறித்தமை உலகெங்கும் காண முடியாத காட்டுமிராண்டித்தனம்.

'கரிகாலன்'

(ஊ) சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தப்படி இத் தமிழ் மக்கள் 5¼ லட்சம் பேர் இந்தியாவுக்கு நாடு கடத்தப் படவிருக்கின்றனர்.

(எ) மலைநாட்டுத் தமிழ் மக்கள் உரிமைகளைப் பறிப்பதற்கு யூ. என். பிக்கு உதவியவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்.

(ஏ) இந்தத் துரோகத்தை எதிர்த்தே திரு. செல்வநாயகமும் அமரர் வன்னியசிங்கமும் தமிழ்க் காங்கிரசிலிருந்து பிரிந்து தமிழரசுக் கட்சியைத் தொடக்கினர்.

கேள்வி: தமிழ் மக்களின் இத்தலையாய பிரச்சினைகளுக்கெல்லாம் மூலகாரணம் என்ன?

விடை: இந்நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தவர்களான சிங்கள மக்களின் கையிலேயே ஆட்சி அதிகாரம் அனைத்தையும் கொடுத்து, சிறுபான்மையினரான தமிழ் மக்களைச் சிங்கள மக்கள் சுரண்டுவதற்கு வழி செய்கின்ற சோல்பரி ஒற்றையாட்சி அரசியலமைப்பே.

கேள்வி: தமிழ் பேசும் மக்களின் சகலபிரச்சினைகளுக்கும் தமிழரசுக் கட்சி தரும் பரிகாரம் என்ன?

விடை: இந்நாட்டின் தமிழ் பேசும் மக்கள் தம்மைத் தாமே ஆளக் கூடியதாக, அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் கூட்டாட்சி (சமஷ்டி) அமைப்பை ஏற்படுத்துவது.

கேள்வி: சமஷ்டி அமைப்பு புதுமையானதா? புரட்சிகரமானதா?

விடை: அல்ல; ஒன்றுக்கு மேற்பட்ட மொழிவாரி, இனவாரி மக்கள் வாழும் நாடுகளில், இன, மொழிப் பிரச்சினைகட்குச் சிறந்த மருந்தாகக் கொள்ளப்பட்டு, பல நாடுகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் அரசியலமைப்பு இதுவேயாகும்.

உதாரணம்: சோவியத் உருஷியா, அமெரிக்கா செக்கோஸ்லவாக்கியா, யூகோஸ்லேவியா, சுவிட்சர்லாந்து.

கேள்வி: சமஷ்டியரசியலமைப்புக்கு ... உவமானம் தருக.

விடை: வேற்றுமையில் ஒற்றுமை காணல் (Unity in diversity) உவமானம்: ஒரு முட்டை — அது இந்நாடு. முட்டையிலிருக்கும் முறையே சிங்கள—தமிழ் இனங்கள். இரண்டு கருக்களையும் இணைத்திருக்கும் கோது—சமஷ்டியமைப்பு. இரண்டு கருக்களும் ஒன்ருேடொன்று கலந்து தனித்தன்மை இழக்கவில்லை; தனித் தனியே சுதந்திரமாக இருக்கின்றன. ஆயினும் ஒன்றிலிருந்தும் மறறையது பிரியாது கோது, இரண்டையும் இணைத்திருக்கிறது. சமஷ்டியமைப்பு தமிழ் சிங்கள இனங்களின் சுதந்திரத் தனித்தன்மையை வெவ்வேருகக் காக்கின்றது; அதே வேளையில் அவற்றை ஐக்கியமாகவும் இணைக்கிறது.

தமிழரும் சிங்களவரும் கலந்து, தனித்தன்மை இழந்து வாழும் ஒற்றையாட்சியமைப்பு, இரண்டு கருக்களும் ஒன்ருேடொன்று கலந்த நிலையில், குப்பையில் வீசவேண்டிய கூழ் முட்டையை ஒத்தது.

தனித்தனி தமிழ்—சிங்கள இனங்கள் வாழ வேண்டுமெனக்கூறும் தனித் தமிழ நாட்டுக் கோரிக்கையை காலமும் சூழ்நிலையும் தாம் நிர்ணயிக்கும். தனித் தனி கருத்துக்கள் உருவாவதையும், வாழ்வதையும் விஞ்ஞான வளர்ச்சியாலே நிர்ணயிக்க முடியுமாப்போல.

கேள்வி: தமிழ் பேசும் மக்களின் தலையாய அடிப்படைப் பிரச்சினைகளில் தமிழரசுக் கட்சியின் கொள்கை என்ன?

விடை (அ) மொழிப்பிரச்சினை: தமிழ் மொழிக்குச் சிங்கள மொழியுடன் சமவுரிமையும் சம அந்தஸ்தும் வேண்டும்.

(ஆ) மலைநாட்டுத் தமிழர் பிரச்சினை: இந்நாட்டைத் தாயகமாகக் கொண்ட அத்தனை பேருக்கும் குடியுரிமையும் வாக்குரிமையும் அளிக்கப்பட்டு, அவர்களும் ஏனைய மக்களுடன் சமஅந்தஸ்தை அனுபவிக்க வேண்டும்.

(இ) குடியேற்றப் பிரச்சினை: தமிழ் மாநிலத்தில் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும்.

கேள்வி: தமிழரசுக் கட்சிக்கும் ஏனைய கட்சிகளுக்குமுள்ள அடிப்படை வேற்றுமை என்ன?

விடை (அ) ஆளும் கட்சியை மாற்றுவதில் மட்டும் நம்பிக்கை கொண்டவை ஏனைய கட்சிகள்; அரசியலமைப்பையே மாற்றுவதை நோக்காகக் கொண்டது தமிழரசுக் கட்சி. இதனுல்......

(ஆ) ஏனையவை அரசியற் கட்சிகள்; தமிழரசுக்கட்சி ஓர் அரசியற் கட்சியல்ல; ஓர் இனத்தின் விடுதலை இயக்கமாகும்.

கேள்வி: விடுதலை இயக்கமாகிய தமிழரசுக்கட்சி, சிங்களப் பிரதிநிதிகளைப் பெரும்பான்மையினராகக் கொண்ட பாராளுமன்றத்தின் மூலம் சமஷ்டியாட்சி பெற முடியுமென நம்புகிறதா?

விடை: அல்ல. சிங்கள மக்களும் சமஷ்டியின் சிறப்பையுணர்ந்து பாராளுமன்றத்தின் மூலம் இதனைச் சாதிக்க முடியுமாயின் நல்லதே. ஆயினும், இதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. பாராளுமன்றத்திற்குப் புறம்பான கிளர்ச்சிகள் மூலமாகவே தமிழரசுக்கட்சி எமது கோரிக்கையைச் சாதிக்கத் துணிந்துள்ளது.

## தமிழா! உன்வாள்!

—'மானுபரணன்'—

காக்கை போல் நம்மோடு கிடந்து
கடமைகள் செய்தோர் யார்?
கண்ணீர் செந்நீர் சிந்தியும் மானம்
காத்து நின்ருேர் யார்?
போக்கிரிக் குயில் போல் இன்றே வந்து
போதனை புரிவோர் யார்!
புழக்கடை வழியாய் போனவர் நம்மூர்
புகுவது தான் ஏன்? ஏன்!
கொள்கைகள் விற்றுக் கொள்ளை யடித்தோர்
கொள்கைய றுக்கும் வாள்!
கொடியவர் இனிமேற் படியே ருமல்
குரல்வளை அரியும் நாள்!
வல்விரை வாக வந்தது! வந்தது!!
வாய்மையின் மீதிற் சூள்:
வந்தனை—சூழ்ச்சி—வஞ்சகம்... வென்ருல்
வாழ்க்கை...யனைத்தும்—பாழ்!
தமிழா உன்றன் வாக்கொவ் வொன்றும்.
தமிழர சுக்கே தா!
தடைகளை யெல்லாம் தாண்டி நடந்துந்
தாயைக் காப்போம் வா
உமியா பதரா உரிமை? எழடா!
உடனே தொடடா போர்
உன்வாக் கொவ்வொன் ருய் நம் போன
உரிமை சேர்க்கும் பார்!

## விரைந்து செல்வீரா!

"கலையரசன்"

ஊதுவாய் சங்கே எங்கள்
உள்நிலை தெரிந்து நேற்று
சாதுவாய் நலிந்த தோள்கள
சமர்புரி தேர்தல் தன்னில்
மோதவே புகுந்து இன்று
விளையாட்டு நடத்துகின்ற
சேதியை எதிர்த்தே வீரம்
செப்புவாய் வெற்றிச் சங்கே!

அதிர்ந்திடு முரசே வெற்றி
அடைவது திண்ண மென்று
நகர்ந்திடு படையின் முன்னே
நானிலம் நடுங்க ஆர்த்து
விசிர்ந்திடும் பகைவை வென்று
வெற்றியின் வாகைசூடி
இதம் தரும் மொழியைக்காக்க
எழுந்ததிர் முரசே எங்கும்!

தமிழ நீ எழுவாய் எங்கள்
தாழ்விலே மீட்சி காண
அமிழ்து நின் மொழியை இந்த
அவனி விட்டோட்டும் கும்பல்
ஒழிவது இன்றே என்று
ஓதியே செல்வா வோடு
விழிநிகர் தமிழைக் காக்க
விரைந்து நீ செல்வாய் வீரா!

## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ருேமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ருேமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் 'சுதந்திரன்' ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுந்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்திற்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆர். டி. வீராசாமி,
தலவாகொல்லை

கே: இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசும் இத் தேர்தலில் மலைநாட்டுத் தோட்டத் தமிழ் வாக்காளர்களுக்கு என்ன வழிகாட்டியுள்ளது?

ப: யு. என். பியை ஆதரிப்பதாக இ. தொ. கா. பத்திரிகை பகிரங்கமாகக் கூறிவிட்டது. ஜ. தொ. காவோ இது பற்றி திட்டவட்டமான முடிவு செய்ததாகத் தெரியவில்லையெனினும் கூட்டணியை ஆதரிப்பதாகவே அறியப்படுகிறது. மலைநாட்டுத் தொகுதிகளிலிருந்து எமக்குக் கிடைக்கும் செய்திகளிலிருந்து இ. தொ. கா ஊழியர்கள் யு. என். பிக்குச் சார்பாகவும், ஜ. தொ. கா. ஊழியர்கள் கூட்டரசாங்கத்துக்குச் சாதகமாகவும் ஆங்காங்கு பிரசாரம் செய்து வருவதாகத் தெரிகிறது. ஆனல் இதுவரை காங்கிரஸ் தலைவர்கள் பகிரங்கமாக யாரையும் ஆதரிக்க முன்வரவில்லை.

ஃ

க. துரைராசா,
கொழும்பு-14

கே: பொன்னம்பலம் புராணத்தை ஒரே வாக்கியத்திற் கூறுங்கள் பார்க்கலாம்?

ப: டொனமூர் அரசியற் திட்டத்தை எதிர்த்து தமிழ் இலங்கைத் தேசபக்தர்கள் நடத்திய பகிஷ்காரத்தை முறியடிக்க வெள்ளைக்கார கவர்னருக்கும் சிங்கள வகுப்பு வாதிகளுக்கும் உதவி புரிந்து, 50க்கு50 என்னும் கோஷத்தை எழுப்பி பின்னர் அதனை பதவிக்காகப் பலி கொடுத்து, சோல்பரித் திட்டத்தை முன்னர் எதிர்த்து பின்னர் ஆதரித்து, பெரிய சேனநாயக்காவை வலம் வந்து தாள் பணிந்து வணங்கியதின் மூலம் அமைச்சர் பதவியைப் பெற்று, குடியுரிமை பற்றி இலங்கை இந்தியர் காங்கிரசுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்கவிட்டு இந்திய பாகிஸ்தானி பிரசாவுரிமைச் சட்டத்தை வாழ்த்தி வரவேற்று, தமிழ் பேசும் இனத்தின் மீது சிங்கக் கொடியைத் திணிக்க உதவி புரிந்து, தமிழ் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் ஆரம்பிப்பதற்கு ஆக்கமளித்து, பெரிய சேனநாயக்கா மரணத்துக்குப் பின் டட்லியை ஆதரித்து பின்னர் கொத்தலாவலையிடம் சரண்புகுந்து அமைச்சரவையில் நுழைந்ததும் அவரால் உதைத்து விரட்டப்பட்டு, பண்டாரநாயக்கா ஆட்சியிற் பதவி கிடைக்காததால் தடுமாறி சிங்களம் மட்டும் சட்டத்தை ஏற்றுக் கொள்ளலாமா என்ற அளவுக்குச் சென்று, செல்வா—பண்டாரநாயக்கா ஒப்பந்தத்தை எதிர்த்து, இறுதியில் விரக்தியடைந்ததால் பாராளுமன்றத்தில் சில காலம் மௌனவிரதம் அனுஷ்டித்து சிறி எதிர்ப்புப் போரில் தலையைக் காட்டி பொலிசார் வழக்குத் தொடரப் போகிறார்களென்றதும் ஓடி மூலையிற் பதுங்கி, சமஷ்டிக்குரலை எழுப்பி பின்னர் ஒற்றையாட்சிக்குத் துதிபாடி, தமிழர் ஐக்கிய முன்னணி என்னும் கோஷத்தை எழுப்பியும் பயனற்றுப் போனதால் தமிழ் பேசும் வாக்காளரிடம் இருமுறை அடி வாங்கி, யு. என். பியிடம் கொண்ட விசுவாசத்தை மறவாமல் 1960ல் யு. என். பி. அரியணை உரைக்கு ஆதரவு தேடி மூக்குறுபட்டு, சத்தியாக்கிரகத்தை எதிர்த்து நாசவேலை செய்து, 4½ ஆண்டுகள் அரசியற் பாலைவனத்திலே அலைந்து திரிந்து, தேர்தல் என்றதும் மீண்டும் மேடையிற் தோன்றி, தமிழர் ஐக்கிய முன்னணி கோஷத்தை எழுப்பி, அது பயனில்லாமற் போகவே யு. என். பியிடமிருந்து "சனநாயகம், சர்வாதிகாரம், வட்ட மேசை மாநாடு" என்ற கோஷங்களைக் கடன் வாங்கி மேடைக்கு மேடை கோஷித்து வருபவரும், தியாகம் செய்தறியாதவரும், சுகபோக வாழ்க்கையை கிஞ்சிற்றும் விட்டுக் கொடுக்காதவரும் 'தனிப் பெருந்தலைவர், குத்துக் கரணமாவீரர், திருவாளர் மதி நுட்பம், திரு திறமைசாலி' ஆகிய விருதாவலிகளைப் பெற்றவரும், "அகில இலங்கை ஆளைப்பந்திக் காங்கிரஸ், பொன்னம்பலம் கட்சி, தேர்தற் கட்சி ஆகிய நாமங்களைப் பூண்ட தமிழ் காங்கிரசின் ஆயுட்காலத் தலைவருமான திரு. பொன்னம்பலம் நாளை மறுதினம் அரசியலுக்கு முழுக்குப் போட்டு விட்டு தம் இல்லம் ஏகி, சட்டத் தொழில் புரிந்து, செல்வம் திரட்டி இம் மண்ணுலகின் கண் சகல சுகபோகங்களையும் அனுபவித்து பல்லாண்டு பல்லாண்டுகளாகச் சுகசீவியாக சிரஞ்சீவியாக வாழ வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

## எது வேண்டும் சொல் தமிழா?

—'உள்ளொளி'—

எதுவேண்டும் சொல்தமிழா—உனக்கு
எதுவேண்டும் சொல்தமிழா?

தரவேண்டும் பிரதேசம் மொழிவேண்டும் என்கின்ற
தமிழரசார் வழி வேண்டுமா?—இல்லை
தருவதைத் தாவென்று பிறருக்கு வால்தூக்கும்
தரங்கெட்ட தோர்வழி வேண்டுமா? (எதுவேண்டும்)

மலைநாட்டார் உரிமைக்கு வழிவேண்டும் என்கின்ற
வளமான சரிபாதை வேண்டுமா?—அவர்
தோலையட்டும் உளமட்டும் தொழில்கிட்டும் என்கின்ற
சுனைகெட்ட வழிசெல்ல வேண்டுமா? (எதுவேண்டும்)

இடமுண்டு மொழியுண்டு அரசுண்டு என்கின்ற
இதமான ஒருவாழ்வு வேண்டுமா—இல்லை
எதையேனும் பேசுவோம் எங்கேயும் வாழுவோம்
என்கின்ற இழிவாழ்வு வேண்டுமா? (எதுவேண்டும்)

மு. கருணாநிதி,
ஏழாலை மேற்கு

கே: பொன்னர் உடுவில் தொகுதிக் கூட்டத்தில் ஆங்கிலச் சொல்லுக்கு தமிழ் மொழி பெயர்ப்பு தெரியாது அருகில் இருந்தவரைக் கேட்டாராம்?

ப: உண்மையாக இருக்கலாம். ஏனெனில் இன்னும் இலங்கையில் வெள்ளைக்காரன் அரசாங்கம் நடப்பதாக அவர் எண்ணிக்கொண்டிருக்கிறார்.

ஃ

வ. சி. தம்பி,
மட்டக்களப்பு

கே: தமிழர் சிங்களவர்களோடு சமத்துவமாக எப்பகுதியிலும் வாழ வேண்டுமென்று தனிப்பெருந் தலைவர் தனது கூட்டங்களில் பேசுகிறாரே. அப்படியானால் சமத்துவமான 50க்கு 50 என்னும் கொள்கையை ஏன் கைவிட்டார்?

ப: சிங்கள வகுப்பு வாதத் தலைவர்களிடம் சரணடைந்து, ஒரு பதவியைப் பெற்றுக் கொள்வதற்காக அக்கொள்கையைக் கைவிட்டார். 'சம அந்தஸ்து' 'சமத்துவம்' என்றெல்லாம் இன்று பேசுவதும், ஒரு தற்காலிக ஏற்பாடே! அந்த ஏற்பாடும் இன்றுடன் காலாவதியாகிறது.

ஃ

மு. கந்தையா, வடலியடைப்பு

கே: தமிழ் காங்கிரஸ் தேர்தல் கூட்டங்களில் கே. [illegible] கேள்விகளுக்கு விடை அளிக்காதிருப்பதின் நோக்கம் என்ன?

ப: விடை அளிக்க முடியாததால்.

ஃ

வி. தங்கத்துரை, ஏருவூர்-5

கே: திரு. பொன்னம்பலம் கோடீஸ்வரன் வழக்கை முன்னின்று நடத்தியிருந்தால் தமிழ் ஊழியரின் அழியாப் புகழைப் பெற்றிருக்கலாமே, ஏன் செய்யவில்லை?

ப: பதினாயிரக் கணக்கில் அவருக்குக் கொட்டிக் கொடுக்க கோடீஸ்வரனிடம் பணம் கிடையாததால்.

ஃ

வி. சிவம், காரைதீவு

கே: நிந்தவூர் தொகுதியில் யூ. என். பி. வைததான் தமிழரசுக் கட்சி ஆதரிக்கும் என்கிறார்களே, இது என்ன புழுகா, புரட்டலா?

ப: இரண்டும்—புழுகும் புரட்டலும்! தமிழரசுக் கட்சி எந்த அரசியற் கட்சியையும் தேர்தலில் ஆதரிக்கவில்லை.

ஃ

கே. கே. வி. ஆனந்தசர்மா,
மாவனல்லை

கே: அடுத்த தேர்தலில் யூ. என். பி. அதிகாரத்துக்கு வந்தால் தமிழர்களின் உரிமையை கொடுப்பார்கள் என்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?

ப: ஒன்றுமே கிடையாது, ஏமாற்றுப் பிரச்சாரங்களில் மயங்காதீர்.

ஃ

த. ஞானசேகரம், ஏருவூர்-5

கே: திரு. பொன்னம்பலத்துக்கு தமிழ் பேசும் மக்கள் 22 வருடங்கள் கொடுத்திருந்தார்களே இப்பொழுது 2 வருடங்கள் கேட்கிறாரே பிரச்சினைகளைத் தீர்க்க?

ப: இதற்கெல்லாம் போய் 2 வருடமா அவகாசம் [illegible] ஒரே அடியாகத் தீர்க்க அதன் அடிப்படை [illegible] நீக்க வேண்டும்-அதுதான் தமிழ் பேசும் இனம், இனத்தைத் தீர்த்துக் கட்டிவிட்டால் பிரச்சினைகள் தாமாகவே உடனடியாகத் தீர்ந்து போய்விடும்.

ஃ

எம். ஏ. ஸ்பைர்டீன்,
பொத்துவில்

கே: யூ. என். பி. ஆட்சிக்கு வந்தால் தமிழுக்கு உரிய இடம் கிடைக்குமென்று நான் கூறுகிறேன் தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?

ப: சாளனித் தீர்மானத்தை மறந்து விட்டீர்களா? யு. என். பி. தேர்தல் விஞ்ஞாபனத்தில் தமிழ்மொழிக்கு அளிக்கப்போகும் அந்தஸ்தைப் பற்றி குறிப்பிட்டிருப்பதைப் பார்த்திருந்தால் இப்படிக் கூற மாட்டீர்கள்.

ஃ

எஸ். செல்லையா பிள்ளை

கே: சுதந்திரன் பத்திரிகைச் செய்தி ஒன்றில் "உரிமைகளை பெற வாய்ப்பு-நல்ல அறிகுறிகள் தென்படுகின்றன" என்று குறிப்பிட்டிருக்கிறது. என்ன அறிகுறிகள் என்று விளக்கவும்?

ப: இது தமிழரசுக் கட்சித் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு வாக்கியம். தெற்கே இடதுசாரிகளும் வலதுசாரிகளும் கடுமையாக மோதிக்கொள்வதால் எந்த சாரியும் பெருவாரியான ஸ்தானங்களைக் கைப்பற்றி அரசாங்கத்தை அமைத்துவிட முடியாது. அந்நிலை ஏற்படும்போது இடதானாலும் சரி, வலதானாலும் சரி தமிழ் பேசும் பிரதிநிதிகளின் ஆதரவை நாடவேண்டிய கட்டாயம் ஏற்படும். இதுதான் நல்ல அறிகுறியாகும். அந்த வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்தினால் உரிமைகளைப் பெற முடியுமல்லவா?

ஃ

ஈழத்துமணி,
யாழ்ப்பாணம்

கே: பொன்னம்பலம் விட்ட சவாலை செ. இராசதுரை ஏற்றும் இதுவரையும் பொன்னம்பலம் மேடையமைத்து பேச முன்வராத காரணம் என்ன?

ப: சிலர் தாங்கள் சூரப் புலிகள் என மக்களுக்குக் காட்டுவதற்காக சவாலுக்கு மேல் சவால் விட்டுக் கொண்டேயிருப்பார்கள். சவாலை ஏற்றுக் கொண்டாலோ ஓடிப் பதுங்கி விடுவார். இதற்கு விதி விலக்கானவரல்ல திரு. பொன்னம்பலம். சொல்லின் செல்வரிடம் தோற்று ஓடி வாங்குவதை விட சும்மாயிருப்பதே சுகம் என்று எண்ணுகிறார் போலும்.

ஃ

பி. சின்னத்துரை, முல்லைத்தீவு

கே: கனடா சமஷ்டியில் பெரும் மொழிப் பிளவு என்று ஏரிக்கரைப் பத்திரிகை கொட்டை எழுத்தில் பிரசுரித்திருக்கிறதே உண்மையா?

ப: பொய்! தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கொள்கையைப் பக்கவாட்டில் தாக்க ஏரிக்கரைப் பத்திரிகைகள் கையாண்ட நரித் தந்திரம் இது.

ஃ

பி. செ நாதன், ஏருவூர்-4

கே: தமிழரசுக் கட்சி தென்னிலங்கையில் 'சமஷ்டிக் கட்சி' என்ற பெயரிலும், வட கிழக்கு மாகாணங்களில் 'தமிழரசுக் கட்சி' என்ற பெயரிலும் இரண்டு விதமாக இயங்குவதாக பொன்னம்பலம் குற்றம் சாட்டினாரே உண்மையா?

ப: தமிழரசுக் கட்சியின் பெயர் எல்லா திசைகளிலும் தமிழரசுக் கட்சியே. பொன்னம்பலம் போன்றோர் இக் கட்சிக்கு எந்தப் பெயரைச் சூட்டினாலும் அதுபற்றி மக்களுக்கோ கட்சிக்கோ கவலை கிடையாது.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

உங்களுக்கு வேண்டிய காரணங்கள் இருக்கின்றதா என்று பாருங்கள்!

எந்தவகையான காரணத்தாலும் மனவேதனை, தொல்லை, துக்கம், துன்பம் இருப்பின், அந்த ரகசியப் பிரச்சினை வெளியிடப்படாது தீர்த்துக் கொடுக்கப்படும். மனைவி—கணவன் பேதம், வழக்கு விவகாரம், பகைவர் தொல்லை, நிந்தனை, பழி, விரும்பியவர்களை அடைதல், தேவையற்றவர்களை விலக்கிவிடல், காதல், அன்பை நிலை நிறுத்தல், பிழை செய்துவிட்டுத் தப்பிவிடப் பார்ப்பவர்கள் அல்லது எந்த வகையான கொடூரமானவர்களையும் அடக்கி வைக்க, வயது கூடி விவாகமின்றி, விவாக சம்பந்தங்கள் முறிந்து போகிறவர்களுக்கு சந்தோஷமான திருமணம் நடைபெற, பட்டம், பதவி, உத்தியோகம், வியாபாரம் அபிவிருத்தியாவதற்கு, ரகசிய நோய்கள், பெண்களின் உடல் இளைத்தல், வேறு தனிப்பட்ட வாழ்க்கையில் எந்தவொரு சிக்கலையும் குப்த சாஸ்திரத்தின் மூலமாகவும், கடவுள் மகிமையாலும், மைவெளிச்சத்தின் மூலமாகவும், மாந்திரீகத்தின் மூலமாகவும் தீர்த்துக் கொடுக்கப்படும். உண்மையாக யாவற்றையும் எழுதுங்கள் அல்லது நேரடியாக வந்து கூறுங்கள். ஞாயிறு, திங்கள் கம்பளையிலும், செவ்வாய் முதல் சனி வரை 103, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, மருதானையிலும் சந்திக்க முடியும்.

கவர்மெண்ட்-ரெஜிஸ்டர் மாந்திரீக வைத்தியர்

பி. எம். திசாநாயக்க,

நாலு தேவாலய பிரதம தர்மகர்த்தா,
அருத எண்ணெய் மருந்துச்சாலை,
கம்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசின் ஆணை கேட்டு ஆர்த்தெழும் வீரர்கள்

## அணி திரளும் திருவிடம் கிழக்கு மாகாணம்

## சுயநலச் சூதுகளுக்கு இங்கு இடம் கிடையாது

**தமிழரசுக் கட்சியின் அறப்போர் முரசொலி அதிரத் தொடங்கியதும் ஆர்த்தெழுந்து, படையின் முன் தாவு வீரர்கள் மலிந்த பூமி கிழக்கு மாநிலம். நீரர் நிறைந்த திருமலையும் மானம் காக்கும் மூதூரும், கயமைகளையும் கல்குடாவும், மாண்பு மிக்க மட்டு மாநகரும், பகையைச் சாடும் பட்டிருப்பும், கொடுமையைச் சிதைக்கும் கல்முனையும், புரட்சி வீரர் நிறை பொத்துவில்லும் என்றென்றும் தமிழரசுக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவை. மாற்றார் விரிக்கும் மாய வலைக்குள் சிக்கி கிழக்கு மாகாணத்தவர் தங்கள் மானத்தை விற்கப்போவதில்லை. தமிழரசுத் தொண்டர்களையே இம்முறையும்—தமிழ் காக்கும் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கத் தயங்க மாட்டார்கள்.**

**தமிழரசுத் தந்தை செல்வா கூறும் வாக்கே கிழக்கு மாகாணத்து மக்களுக்கு தாரக மந்திரமாகும். தலைவனின் ஆணை கிடைத்து விட்டது. இனிமேல் வேறு எவர் கூறும் வார்த்தையும் வீணுகி விழலாகி விடும்.**

நேற்றுதொட்டு திருகோணமலை மாநிலம் தமிழ் பேசும் மக்களின் தனியுடமையாயிருந்த பிரதேசம். கோணேசப் பெருமானின் திருபாகடாட்சத்தாலும், கரிமலியாதிகளைக் கண்டிக்கும் கன்னியாவின் வெந்நீரூற்றுக்களாலும், கடலோடு நாவாய்களுக்கு காவலரணமைக்கும் இணையற்ற இயற்கைத் துறைமுகத்தாலும் இப்பதி மென்மேலும் பெருமையும், சிறப்பும்பெற்றுத் திகழ்கிறது.

தமிழ் பேசும் இனத்தின் தலைநகரெனக் கொள்ளப்பட்டுவரும் இத்தலத்தை அபகரிப்பதன் மூலம் திருகோணமலையை தமதுடமையாக்கிவிடத் துடிக்கிறது சிங்கள ஏகாதிபத்தியம். திட்டமிட்ட குடியேற்றங்களால் இப்பூமி அபகரிக்கப்படுவதைத் தடுக்கவே தமிழரசுக் கட்சி சிங்கள அரசின் குடியேற்றத் திட்டங்களை வன்மையாகக் கண்டித்து வருகிறது.

### திருமலை காத்த தீரர்

திருமலை தந்த தீரர் அமரர் இராசவரோதையம் திருமலையைக் கட்டிக் காக்கும் பணியில் கருத்தூன்றி செயல் புரிந்தார். அருந் தமிழ்ப்பணி புரிந்த அஞ்சா நெஞ்சன் இராசவரோதயம் வீற்றிருந்து செங்கோலோச்சி, ஆட்சிபுரிந்த திருமலையை சிங்கள ஆதிபத்திய வெறியாட்டத்துக்கு அடிபணியவைக்கத் துடிக்கும் துரைத்தனத்தார், சர்வ சிங்களக் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆலவட்டம் தூக்கி, இன்று அதே கட்சி வேட்பாளனுகி திருமலை மக்கள்முன் வந்து வாக்குப் பிச்சை எடுப்பதை எந்தத் தமிழ் பேசும் வாக்காளன் பார்த்துக்கொண்டிருப்பான்?

திருமலைத் தீரர் இராசவரோதயத்தின் அடிச்சுவடு பற்றி திருமலை மக்களை வழிநடத்தி விடுதலைப்போருக்கு அழைத்துச்செல்ல ஏற்ற முதல்வனுக என்றே திரு. எஸ். எம். மாணிக்கராசாவை மக்கள் தேர்ந்தெடுத்துக் கொண்டனர். ஆகவே திருமலை வாழ் மக்கள் இருபத்திரண்டாம் திகதி தங்கள் கடமையைச் சரிவரச் செய்வர் என்பதில் ஐயமில்லை.

### மூதூர்

சத்தியாக்கிரக அறப்போரில் குதித்த மூதூர் மக்களை விடுதலைப்பணிக்குத் தயாரித்த மாவீரன் ஏகாம்பரம் களத்திலேயே பலியாகி இன்றோடு நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அமரன் ஏகாம்பரன் மூதூர் மக்களின் முதல்வனுக, முஸ்லிம்களும் இந்துக்களும், கிறிஸ்தவர்களும் போற்றும் வண்ணம் பணி புரிந்தவர். அவர் விட்ட பணியைத் தொடர மூதூர் மக்கள் ஜனுப் முகம்மது அலியை தங்கள் முதல்வராக்கினர்.

அப்பழுக்கற்ற அருங்குணசாலியான முகம்மதலி அவர்கள் இனவிடுதலைப் போர்ப் படையின் முன் தாவு வீரராக இன்று திகழுகிறார். தாய்த்தமிழ் மொழியைக் காக்கும் பணியைத் தம் தலையாய பணியெனக் கொண்டு மக்களை இட்டுச் செல்கிறார் அவர்.

**'பானு'**

உரிமைகளை வழங்க வேண்டிய கடமையுள்ள வேளையிலே சில சலுகைகளை மட்டும் செய்துவிட்டு, முஸ்லிம்களுக்குச் செய்தற்கரியன யாவற்றையும் செய்தோம் என்று வாய்ப்பந்தலிடும் சுதந்திரக் கட்சிக்கு வக்காலத்து வாங்கும் வாய்வீரர்கள் மத்தியில், கொண்ட கொள்கைக்காக எத்தகைய கொடுமைகளையும் ஏற்கத் தயார் என்று உறுதிகொண்ட நெஞ்சினராம் ஜனுப் முகம்மதலியை மூதூர் மக்கள் தங்கள் முதல்வராய்ப் பெறுவதில் பெருமை கொள்ளாரோ?

### கல்குடா


ஐக்கிய தேசியக் கட்சியிலே அன்று சேர்ந்து அமைச்சர் பதவி வரை பெற்று இடையில் தமது அரசியல் அஸ்தமனத்துக்கான அத்திவாரத்தை வெட்டிக்கொண்டவர்கள் இன்று தமிழ் காக்கப் புறப்பட்ட அதிசயத்தைக் கல்குடாவில் காண்கிறோம்.

'யாழ்ப்பாணத்தான் கட்சி எமக்கு வேண்டாம்' என்று வானுயரக் கூவி பிரதேச பேதத்தை மூட்டியே தங்கள் வளர்ச்சியை விருத்தியாக்க முயன்றவர்கள் இன்று யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தனிப்பெருந் தலைவரான திரு. பொன்னம்பலத்தின் சொந்த உடமையான தமிழ்க் காங்கிரஸ் சீட்டுடன் தேர்தற் களத்திலே புகுந்த விந்தையினை இங்கு காண்கிறோம்.

1956-ம் ஆண்டிலே கனவி மாநாட்டிலே சிங்களம் மட்டும் திட்டத்தை யு. என். பி. கொண்டுவந்த வேளையிலே கொக்கரித்தெழுந்து போட்டு 'தமிழா எழுந்திரு! உனக்கொரு நாடு வேண்டும்! உன் மொழியைக் காக்க ஓடு! ஓடு!' என்று ஓலமிட்ட ஒரு திருவாய் இன்று கல்குடாவில் யூ. என். பி. தேசியகீதம் இசைக்கத் தொடங்கிவிட்டிருக்கிறது இக்குரல், அன்று வேடம் போட்டதா, இன்று வேடம் புனைந்துள்ளதா என்பதை மக்கள் நன்குக அறிவர்.

இவை போதாதென்று தமிழ் பேசும் இனத்தை சிங்கள வெறியாட்டத்துக்கு விலை பேசும் வண்ணம் சுதந்திரக் கட்சிச் சீட்டுடனும் ஒருவர் 'பிரவேசித்துள்ளார்.

இவர்களுக்கு மத்தியில் உண்மையான, உறுதியான—தமிழ் பேசும் இனத்துக்கு விடுதலை அளிக்கவல்ல தமிழரசுக் கட்சி வேட்பாளனுக முன்வந்திருப்பவர் திரு. பொ. மாணிக்கவாசகர். கொள்கைப் பற்றும் செயற்திறனும் கொண்ட திரு. மாணிக்கவாசகரின் தலைமையைக் கற்குடா மக்கள் ஏற்றுக் கொண்டிருப்பதனால் திரு. மாணிக்கவாசகரின் வெற்றி நிச்சயமானது.



திருமலைத் தீரர்
திரு. இராசவரோதயம்

### மட்டக்களப்பு

மானம் காக்கும் மறத் தமிழர் வாழும் பூமி மட்டக்களப்பு. பட்டதாரிகளை நாட்டை ஆள வேண்டும், பாட்டாளிக்குப் பாராளுமன்றம் பகற்கனவு, என்ற பண்டையக் கோட்பாட்டை உடைத்தெறிந்து பரம ஏழையும் தமிழ் படித்து, தமிழ் முறை வாழ்ந்து—தமிழுக்காக உயிரையும் தரவல்ல இளைஞன் திரு. இராசதுரையைப் பாராளுமன்றம் அனுப்பிப் புரட்சி செய்து பெருமை கொண்ட பூமி இது.

காலத்துக்கு ஒரு கருத்து வேளைக்கு ஒரு வேடம். நேரத்துக்கு ஒரு நிறம் கொண்டு பச்சோந்திவேடம் போடும் காங்கிரஸ் காரருக்கோ; கருத்தையும், கொள்கையையும் விலை கூறி விற்று ஏமாற்று வித்தை காட்டும் வினருக்கோ மட்டக்களப்பு ஒருபோதும் வழிவிட்டுக் கொடுக்காது என்பதனுல் பட்டிருப்பை ஒருமுறை எட்டிப் பார்ப்போம்.

### பட்டிருப்பு


சங்கிலி மன்னனைச் சதிக்குள் வீழ்த்த ஒரு காக்கைவன்னியன் எழுந்தான். கட்டபொம்மனை அன்னியனுக்கு விலைபேச ஒரு எட்டப்பன் துணிந்தான். இந்த வரலாறுகள் பொய்யல்ல என்பதை இன்றும் அறை கூவுவது பட்டிருப்பு. இங்கு தமிழ் படித்த புலவர்களும் தலைகீழாக மாறும் அதிசயம் நடைபெறுவது தான் விந்தையிலும் விந்தை. பட்டிருப்புத் தொகுதியில் பிறந்த ஒரு தமிழ்ப் பேராசான் பட்டிருப்பில் எட்டப்பருக்குத் தோழன், எட்டப்பர் எக்கட்சியோ அக்கட்சி புலவருக்கு அமிர்தம். அதேவேளையில் இந்தத் தமிழாசான் மட்டக்களப்பில் தமிழ் காங்கிரசுக்கும், திருமலையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வக்காலத்து வாங்கத் தலைப்படுவது மக்களுக்குப் பேரதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் அளிப்பதில் ஆச்சரியமில்லையல்லவா?

பட்டிருப்புக்கு ஏற்ப பணிபுரிபவர் தமிழரசுக் கட்சியின் முன்னுள் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் அவருடைய வெற்றி பட்டிருப்பு மக்களின் வெற்றி மட்டுமல்ல தமிழ் பேசும் தன்மானமுள்ள சமுதாயத்தின் வெற்றியாகும்.

### கல்முனை

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் கிழக்கு மாகாணத்தில் வாழும் முஸ்

(12-ம் பக்கம் பார்க்க)



திருமலை தந்த தீரர் இராசவரோதயம், மூதூர் தலைவன் ஏகாம்பரம் ஆகிய இருவரும் இன்று அமரர்... சத்தியாக்கிரகப் போர் திருமலையில் நடைபெற்றபோது இருவரும் ஆற்றிய ... இதோ இரண்டுள்ள திருமலைத் தீரர்களின் ... அறிவுரை கூறும் காட்சியைப் பாருங்கள் ... வாழ்ந்து காட்டிய வீரர்களின் பணி கண்டோர் வீறு பெறத் தமிழரசார் தொடுக்கும் அறப்போருக்கு ஊறுதேடத் துணிவரோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'தூக்குக் கயிற்றில் தொங்கவும் நான் தயார்'



## அமரர் வன்னியசிங்கம்

'ஒருவன் தன் மொழியுரிமைக்காக போராடுவது, அதேசமயம் மற்றொருவரின் மொழிக்கு கேடு பயக்காது சிங்களத்தோடு செந்தமிழுக்கு ஒத்த உரிமை வழங்க வேண்டுமென கேட்பது தேசத்துரோகமென்றால்—

'எமது மரபு வழித்தாயகத்தின் அரசியல், பொருளாதாரம், பண்பாடு முதலியன சிங்களப் படையெடுப்பால் அழிந்தொழியாது இருக்கப் போராடுவது தேசத்துரோகமென்றால்—

'இந்த நாட்டையே தங்கள் தாயகமாக கொண்டு அதன் வருவாயின் நூற்றுக்கு அறுபது சதவிகிதத்தை நல்கும் தமிழ்த் தொழிலாளர்களது குடியுரிமை-வாக்குரிமைக்கு போராடுவது தேசத்துரோகமென்றால்—

'இதே, தமிழ்த் தொழிலாளர்களது அடிமை நிலையைப் போக்கப் போராடுவது தேசத்துரோகமென்றால்—

'இன்று இலங்கையில் உள்ள அரசியல் அமைப்பை மாற்றி கூட்டாட்சி அடிப்படையில் அதிகாரத்தைப் பிரித்து அதே நேரத்தில் நாட்டைப் பிளக்காது, ஒரு அரசியல் அமைப்புக்கு வழிகோல நாம் அறப்போர் தொடுப்பது தேசத்துரோகமென்றால்—

இத்தனை தேசத்துரோகங்களையும் மொத்தமாக நிறைவேற்றி அதன் பலாபலன்களை மகிழ்ச்சியோடு ஏற்பேனே ஒழிய, எனது இனம் ஒவ்வொரு திருப்பத்திலும் இழிந்து பழிக்கப்பட்டு சிதைந்து சிறுத்து காலப்போக்கில் அழிவதை சகியேன். இனத்தின் உரிமைக்காக போர் தொடுப்பதால் தேசத்துரோகியென குற்றஞ்சாட்டப்பட்டு தூக்குக் கயிற்றில் தொங்கவிடப்படுவதையே நான் வரவேற்கிறேன்.'

பாராளுமன்றத்தில், 1957

# தமிழ்க் கிழவன் எங்கள் தானைத் தலைவன்!



எங்கள் தலைவனை நாங்கள் நம்புகிறோம்.

மேடையில் தோன்றும் அந்த மெல்லிய மனிதன் எங்களுடைய வழிகாட்டியாக இருக்கிறான்.

முதியவனாகிவிட்ட காரணத்தினால் அவன் உடல் நடுங்கிக்கொண்டிருக்கிறது.

அவனுடைய கரங்கள் நடுங்குவதும் கால்கள் நடுங்குவதும் முதுமையின் அறிகுறிகளே!

என்னதான் முதுமைதட்டிவிட்டாலும் எங்கள் தலைவனுக்கு நாங்கள் மரியாதை செலுத்துகிறோம்.

நடுங்குகின்ற கிழவனுக்குப் பின்னால் நாங்கள் கண்களை மூடிக்கொண்டு நடந்து செல்லத் தயாராக இருக்கிறோம்.

இந்தக் கிழவனுடைய நடுக்கத்தைவிட இந்தக் கிழவனை பார்க்கும்போதெல்லாம் ஆட்சி பீடத்தில் உள்ளவர்களுக்கு ஏற்படும் நடுக்கமே மிகவும் அதிகமானதாகும்.

நாங்கள் எங்கள் தலைவனை நினைத்து உண்மையிலேயே பெருமைப்படுகிறோம்.

கிழவனை ஒருவகையில் நாங்கள் காதலிக்கிறோம்.

இந்தக் கிழவன் எங்களுடைய மானத்தைவிட எதிரி போடும் எச்சில் இலை மேலானதென்று எந்தக் காலத்திலும் சொன்னதில்லை.

தமிழ் பேசும் இனத்தை நடுத்தெருவில் நிற்கவிட்டு இவன் என்றைக்குமே தனக்கொரு நாற்காலி தேடிப்போனதில்லை.

நம்பிக்கைக்குப் பாத்திரமான எங்கள் தலைவனுக்காக நாங்கள் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறோம்.

இலங்கைத் தமிழ் பேசும் இனம் கிழவனின் ஆணைக்கு எந்த நிமிடத்திலும் கட்டுப்பட்டுக் கிடக்கிறது.

'அடிமைகளாக இருக்க மாட்டோம்' என்று முழக்கமிடும் நாங்கள் எங்கள் தலைவனுக்கு மட்டும் அடிமைகளாகவே இருக்க விரும்புகிறோம்!

இந்த உலகத்தில் கிழவனுடைய கட்டளையை மிஞ்சிய மந்திரம் எங்களுக்கு எதுவுமே இல்லை.

அவன் கேட்கும் பொருளை அவன் கேட்கும் இடத்திலேயே நாங்கள் காணிக்கை வைப்போம்.

இரத்தத்தைக் கேட்டால், நாங்கள் இரத்தத்தைக் கொடுப்போம் இறக்கச் சொன்னால் நாங்கள் இறந்து மடிவோம்!

முப்பது லட்சம் உயிர்களுக்கும் அவனே தலைவன் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது

எங்களுக்கு விடுதலை கொண்டுவரப் போகும் அந்த வயோதிப வீரனுக்குப் பின்னால் இறுமாப்போடு நாங்கள் நடந்து செல்கிறோம்.

அவனுடைய கோரிக்கை நீதியானது என்பதால் வெற்றியும் அவனுக்கு நிச்சயமானதே!

நாங்கள் எங்கள் கிழவனை மனம்விட்டு வாழ்த்துகிறோம்.

தமிழ் மானம் காக்க வந்த தலைவனே! நீ பல்லாண்டு வாழ்க!

உன்னுடைய நேர்மை எங்கள் பகைவனுடைய வஞ்சனையை நிர்மூலம் செய்வதாக!

விடுதலை பெற்ற தமிழரசில் உன் வெற்றி முகம் பார்த்து மகிழ ஒவ்வொரு மணித்துளியும் இறைவனை இறைஞ்சுகிறோம்.

தமிழ்க் கிழவா! தானை நடத்த வந்த தனிப் பெருந் தலைவா...! நீ வாழ்க வாழ்கவே!

காசி. ஆனந்தன்.

நையாண்டி

## ......ஆனால் சிரிப்பதற்கல்ல!

1960 யூலைத் தேர்தலை யொட்டி தமிழ் காங்கிரஸ் கா சியல் இறுதித் தேர்தல் கூட்டம் யாழ் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. காட்சிப் பேச்சாளராக திரு. பொன்னம்பலம் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார். மேடையில் திருவாளர்கள் மு. சிவசிதம்பரம், ஆர். என். சிவப்பிரகாசம், எஸ். ஆர். கனகநாயகம் போன்றோர் அமர்ந்திருக்கிறார்கள்.

பொன்னம்பலம் ஆங்கிலத்தில் சிந்தித்து தமிழில் உரை நிகழ்த்திக் கொண்டிருக்கிறார் அவரது பேச்சில் தமிழ்ச் சொற்களிலும் பார்க்க ஆங்கிலச் சொற்களே நாவில் நர்த்தனம் புரிகின்றன. ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ் சொற்களை பின்னிருந்து தமிழ் படுத்திக் கூறுகிறார் திரு. ஆர். என். சிவப்பிரகாசம்.

இடையில் ஒரு நீண்ட ஆங்கிலச் சொற்றொடருக்கு தமிழாக்கம் கேட்கிறார் பொன்னம்பலம், திரு. சிவப்பிரகாசம் புரியாது முழிக்கிறார். மேடையில் படபடப்பு பொன்னம்பலம் குதிக்கிறார். தமது சிட்டைகோழிகளைன் திறமை கண்டு திரு. எஸ். ஆர். கனகநாயகம் நன்றாக யோசித்தார். என்றாலும் அவ்வாங்கிலச் சொற்றொடர் புரியவில்லை திரு கனகநாயகத்தினுடைய ஒரு யோசனையில் வேட்பாக எழுந்தார், ஒலி பெருக்கியண்டை சென்றார் 'இந்த இங்கிலிசுக்கு' தமிழே கிடைக்காது, ... கூறிவிட்டு அமர்ந்துவிட்டார். பொன்னம்பலத்தின் முகத்தில் இனம் புரியாது ஒரு பெருமை அவரது 'இங்கிலிசுக்குத் தமிழ் இல்லை என்று.

தொடர்ந்து பொன்னம்பலம் பேசிக்கொண்டிருக்கிறார் இலங்கைத் தமிழரசுக் கட்சியை அக்குவேறு ஆணிவேறாக பியர்த்தெறிகிறார் ஐ. தே. கட்சி அரசாங்கத்தின் அரியணை உரையைத் தமிழரசுக்கட்சி எதிர்த்தது தவறு என்று கூறிவிட்டார்.

அட்புக்காத்து மூளையல்லவா? திருப்பிப்பார்த்தார் திரு மு. சிவசிதம்பரம் பிடித்து வைத்த பிள்ளையார் மாதிரி மேடையின் ஒரு மூலையிலிருக்கிறார். திரு சிவசிதம்பரமல்லவா அந்த ஐ. தே. கட்சியின் அரியணை உரையை எதிர்த்தவர்? அப்படியானால் ... அல்லவா பாதிக்கும்?

நிலைமையை கனகச்சிதமாகச் சமாளித்தார்கள் பொன்னம்பலமும், சிவசிதம்பரமும். பொன்னம்பலம் திரும்பி ஒரு முறைப்பு முறைத்துவிட்டு கையசைத்தார்...கையசைத்ததுதான் தாமதம், திரு சிவசிதம்பரம் எப்படி தலையைப் பொதுமக்கள் பார்வையிலிருந்து மறைத்துக்கொண்டாரோ தெரியவில்லை.. பொன்னம்பலம் தொடர்ந்தார்...தமிழரசுக்கட்சியார் ஐ தே கட்சியின் அரியணை உரையை எதிர்த்து வாக்களித்தது மடமை, முழுமுட்டாள்தனமானது. இதனால் 'எனது தமிழ் சாதி ஒரு நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிட்டு விட்டது என்று வாங்கித் தள்ளியே விட்டார்.

இது திரு. பொன்னம்பலத்தின் மதிநுட்பம் நிறைந்த திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்விட்ட குறையை முடிப்பதற்கு முனைகிறார் பொன்னம்பலம்

## ஓய்வு கொடுக்க முடிவு செய்துவிட்டனர் மக்கள்

திருவாளர் பொன்னம்பலம் அவர்களுடைய தேர்தற் பேச்சுக்களைப் படிப்பவர்களுக்கு அன்னார் மீது அனுதாப உணர்ச்சியே ஏற்படும். திரு. பொன்னம்பலத்தின் கால்நூற்றாண்டு அரசியல் வரலாற்றில் மலிந்து கிடப்பது கொள்கைக் குழப்பமும், கொள்கை முரண்பாடும். இல்லாதது, வரையறுக்கப்பட்ட ஒரு அரசியல் தத்துவமாகும். அவரது அரசியல் தோல்விக்கு இதுவே மூலகாரணம்.

### பொன்னரின் நிலை

1947க்கு முன்—சமபல பிரதிநிதித்துவம் (ஐம்பதுக்கைம்பது) ஒற்றையாட்சி நிராகரிப்பு.

1947-48—சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டிக் கோரிக்கை.

1949-53—ஒற்றையாட்சி, ஒத்துழைப்பு, நல்லெண்ணம் தமிழினத்தின் எதிர்காலம்.

53-54—டட்லி தமிழ் மக்களது இரட்சகன், கொத்தலாவலை விரோதி.

1956-60—சம அந்தஸ்து அல்லது பிரிவினை.

1960-64—ஒற்றையாட்சி, வட்டமேசை.

64-65—ஒற்றையாட்சி, ஒத்துழைப்பு, நல்லெண்ணம், வட்டமேசை, போராட்டம், சனநாயகம், இராஜினமா...?

திரு. பொன்னம்பலத்தின் மேற்கண்ட அரசியல் பரிணாம வளர்ச்சி (தேய்வு?) அவரது அரசியல் வங்குரோட்டுத்தனத்தை துலாம்பரமாக எடுத்துக் காட்டுகிறது.

### காங்கிரஸ் தேய்ந்த விதம்

திரு. பொன்னம்பலத்தின் இத் திருக்கல்யாண குணங்கள் காரணமாகவே அவரது அ. இ. காங்கிரஸ் ஆனைப் பந்தி காங்கிரசாகத் தேய்ந்துவிட்டது. புள்ளி விபரம் வேண்டுமா?

| | | |
|---|---|---|
| 1947— | 7 | பா. உ |
| 1949— | 4 | ,, |
| 1952— | 3 | ,, |
| 1956— | 1 | ,, |
| 1960 (மாசி) | 1 | ,, |
| ,, (ஆடி) | 1 | ,, |
| ,, (ஆவணி) | 0 | ,, |
| 1965 | 0 | ,, |

—தாமரை மணாளன்

நாலரை ஆண்டுகள் அரசியற் பாலைவனத்தில் அலைந்து திரிந்த பொன்னம்பலம் தேர்தல் என்ற மழையைக் கண்டதும் பழைய ஞாபகங்கள் நாக்கிலே நீரை வரவழைக்க, 'இந்த எளிய தமிழ் 'சாதி'யினுடைய படலையை இனித் திறப்பேனோ' என்று 1960 தேர்தலில் மண் கவ்விய ஆத்திரத்தில் கொட்டிய வார்த்தைகளையும் மறந்துவிட்டு, அசல் அரசியல் விதவைகளைத் துணைக்குக் கட்டி இழுத்துக் கொண்டு நாட்டில் 'பவனி' வருகிறார். எடுத்தேன்—கவிழ்த்தேன் என்ற பேச்சுக்களுக்குப் பஞ்சமே இல்லை.

திரு. பொன்னம்பலம் கக்கிய சில அரசியல் முத்துக்களைச் சுருக்கமாக ஆராய்வோமா?

'கறுப்புக் கொடி காட்டிப் பகிஷ்கரிப்பதாலோ, கச்சேரி வாசலில் இருந்து சத்தியாக்கிரகம் செய்வதாலோ தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. இதனால்தான் நான் இவற்றில் பங்குபற்றாமல் விலகியிருந்தேன்' (வீரகேசரி 27-2-65)

திரு. பொன்னம்பலம் அவர்களுக்குப் போராட்டத்தில் என்றுமே நம்பிக்கை இருந்ததில்லை. அது அவரது உடம்புக்கும், பட்டு வேட்டி சால்வைக்கும் ஒத்துவராத ஒன்று. அவர் தமிழினத்திற்குக் காட்டுகிற வழி, தமிழர்களின் பிரச்சினைகளுக்குச் சொல்லுகிற பரிகாரம் சிங்களவர்களின் நல்லெண்ணத்தோடு ஒற்றையாட்சி அரசியற் திட்டம்'.

(பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபக் கூட்டம் 13-2-65)

(13-ம் பக்கம் பார்க்க)


# வட மாகாணத்தில் நல்ல வரவேற்பு!

ஆமாம்!

## அருத எண்ணெய்

பாவிப்போரின் தொகை நாளுக்கு நாள் பல்லாயிரக் கணக்கில் பெருகிக் கொண்டே வருகின்றது! இன்றே நீங்களும் அருத எண்ணெய் பாவித்துப் பலனடையுங்கள்! அருத எண்ணெய் கேச வளர்ச்சிக்கும், மூளைக் குளிர்ச்சிக்கும் சிறந்தது. நீங்காத ஜலதோஷத்தையும், நீண்ட நாள் பீனிசத்தையும் குணப்படுத்தவல்லது. கண், தலை, காது, மூக்கு சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் சொஸ்தப்படுத்தவல்லது.

—சிறுவர் முதல் பெரியோர் வரை பாவிக்கலாம்—

## பி. எம். திசாநாயக்க,

நான்கு கோவில்களின் தர்மகர்த்தா

அருத எண்ணெய் அலுவலகம், கண்டி ரோட், கம்பளை.

### யாழ்ப்பாணத்தில் அருத எண்ணெய் விற்பனையாளர்கள்:

**யாழ்ப்பாணம்**
வி. எஸ். கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்,
76, பெரியகடை.
ஏ. இராசையா அன் சன்ஸ்,
69, கே. கே. எஸ். ரோட்.
ஸ்ரீ ஆனந்த பவான்,
ஸ்டேசன் ரோட்.
எஸ். வி. பி. கார்த்திகேய பிள்ளை, பெரியகடை.

**நல்லூர்**
பி. இராசரத்தினம்,
குமரன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
முருகன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
நடன முருகன் மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்,

**திருநெல்வேலி**
சிவன் ஸ்டோர்ஸ்,
பரமேஸ்வரா ஜங்சன்,
எம். நடராசா & பிரதர்ஸ்,
திருநெல்வேலி வடக்கு.

**கோப்பாய்**
ஈ. கதிரேசு,
கோப்பாய் சந்தி,
சிவபாதம் ஸ்டோர்ஸ்,
இருபாலை சந்தி.

**சாவகச்சேரி**
லிங்கம் ஸ்டோர்,
அம்பிகா டிஸ்பேன்சரி,
ஏ. எம். அபூபக்கர்,
எம். எம். சுல்தான் அப்துல் காதர் அன் பிரதர்,
விநாயகர் ஸ்டோர்ஸ்,

**இணுவில்**
குமரகுருபர ஸ்டோர்ஸ்,
எஸ். பரமலிங்கம்.

**சுன்னாகம்**
யாழ்ட்டன் ஸ்டோர்ஸ்,
ராஜா மெடிக்கல் ஸ்டோர்ஸ்
பிருந்தா மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
ஆர். எம். கான்பாய்,
எஸ். வைத்திலிங்கம்,
சுன்னாகம் தெற்கு.
எம். கே. செல்லையா,
71, மார்க்கெட்.
ஏ. கே. சாந்தலிங்கம்,
70, மார்க்கெட்.
எம். தம்பித்துரை,
கந்தரோடை ரோட்.

**கலட்டி**
கே. டி. சிவகுரு,
17, நாச்சிமார் கோவிலடி.

**கோண்டாவில்**
கே. கோபாலபிள்ளை,
கோண்டாவில் மேற்கு.

**சுழிபுரம்**
எல். முருகேசு,
மூளாய் ஆஸ்பத்திரி முன்னால் மூளாய்.
கே. தம்பு.

**சண்டிலிப்பாய்**
கே. டி. நடராஜா,
மாசியப்பிட்டி.

**காங்கேசன்துறை**
கே. செல்லையா அன் பிரதர்
சாந்தினி ஸ்டோர்ஸ்,

எஸ். இளையதம்பி,
பருத்தித்துறை ரோட்.
டி. கனகசபை, மெயின் வீதி,
சிங்கப்பிடா ஸ்டோர்ஸ்.
விநாயகர் ஸ்டோர்ஸ்.
பிள்ளையார் ஸ்டோர்.
ஆசை ஸ்டோர்ஸ்.
தெஹிவட்டி.
வி. ஐயாத்துரை.
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்.

**பண்டத்தரிப்பு**
ப. நோ. கூ. ச. சமாச புடவை, சில்லறை விற்பனை நிலையம்,
பிரதான வீதி.
ஸ்ரீ அம்பாள் ஸ்டோர்ஸ்.
என். நல்லசேகரம் ஸ்டோர்ஸ்.
கே. எல். அந்தோனிப்பிள்ளை அன் சன்ஸ்.

**ஊர்காவற்றுறை**
வசந்தா ஸ்டோர்ஸ் அன் பேக்கரி.
மகாலக்ஷ்மி ஸ்டோர்ஸ்.
வி. எஸ் விஞாசித்தம்பி அன் சன்ஸ்.
முருகன் ஸ்டோர்ஸ்.
வி. திருநாவுக்கரசு,
ப. நோ. கூ. ச. பருத்தியடைப்பு.
பாலா பிரதர்ஸ்.

**மானிப்பாய்**
எம் சின்னத்துரை.
வி. எஸ் கணபதிப்பிள்ளை அன் பிரதர்.

**ஆனைக்கோட்டை**
ஆர். அருணாசலம்,
வண்ணார்பண்ணை வ. மே.

**ஆவரங்கால்**
மல்லிகா ஸ்டோர்ஸ்.
எம். சிவரத்தினம்.

**புத்தூர்**
செல்லத்துரை ஸ்டோர்ஸ்.

**சுன்னாலை தெற்கு**
ஐ. பொன்னம்பலம்.

**மாவிட்டபுரம்**
ராஜா ஸ்டோர்ஸ்.
முருகன் ஸ்டோர்ஸ்.

**மயிலிட்டி**
எஸ். நடராசா,
மயிலிட்டி கரை.
கே. சிதம்பரபிள்ளை,
அ. மிக்கேல்பிள்ளை அன் சன்ஸ்
ஜி. ஜிதியோன்பிள்ளை,
எஸ். கனகசபை,
பலாலி சந்தி.

**கரவெட்டி**
நடன முருகன்,
மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
நெல்லியடி
வி. சுப்பிரமணியம்,
நவிண்டில்.
லக்ஷ்மி ஸ்டோர்ஸ்,
நெல்லியடி.
ஈஸ்வரி மெடிக்கல் ஸ்டோர்ஸ் நெல்லியடி.
எஸ். வி. முருகேசு,
நெல்லியடி.
கே. எஸ். வீரகத்தி,
மாவளிக்கபதி,
கரவெட்டி மேற்கு.
கிருஷ்ணா ஸ்டோர்ஸ்,
முருகன் ஸ்டோர்ஸ்,
கணேஷ் மெடிக்கல் ஸ்டோர்ஸ்,
நெல்லியடி.

**பருத்தித்துறை**
கே. எஸ். மார்க்கண்டு,
குமாரவேல் மருந்துச்சாலை.

**வல்வெட்டித்துறை**
கலாநிதி ஸ்டோர்ஸ்,
எஸ். கே. சின்னத்துரை.
ச. எம். வில்வலிங்கம்.

**மில்லடி**
கே. சுப்பிரமணியம்,
கல்வத்தை.

**உடுப்பிட்டி**
வி. சிவரத்தினம்,
வைரவர் கோயிலடி.

**அச்சுவேலி**
டி. இராமலிங்கம் அன் சன்ஸ்,
ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்,
எம். இராசையா,
எஸ். கந்தசாமி,
சன்னதி ரோட்,
கணேசன் ஸ்டோர்,
சுகன்யா ஸ்டோர்.

**தெல்லிப்பளை**
எஸ். ரகுநாதன் அன் கம்பெனி,

**சங்கானை**
கதிர்வேல் மெடிக்கல் ஸ்டோர்ஸ்.
என். டி. இராசரத்தினம்,
மார்க்கெட் பிரைட்ஸ்
ஏ. டி. வேலுப்பிள்ளை அன் சன்ஸ்
என். காசிப்பிள்ளை,

**உரும்பராய்**
விக்னேஸ்வரன் ஸ்டோர்ஸ்,
எஸ். தனபாலசிங்கம்,

**உடுவில்**
எஸ். மயில்வாகனம்.

யாழ்ப்பாணத்திற்கு ஏக விநியோகஸ்தர்கள்:

**எஸ். சுப்பிரமணியம் அன் கம்பெனி,**

**53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய தமிழ் காங்கிரஸ் உயிரற்ற உடல்

## சுயநிர்ணய உரிமை கேட்ட இயக்கம் செத்து விட்டது

## சிங்களம் மட்டும் சட்டத்திற்கு பொன்னம்பலமே காரணம்




(8)

குடியுரிமைச் சட்டங்களுக்கு திரு. பொன்னம்பலம் ஆதரவளித்தது தமிழினத்துக்கு இழைக்கப்பட்ட துரோகமென்றால், பாராளுமன்ற தேர்தற் திருத்த சட்டத்திற்கு ஆதரவளித்தது அந்த துரோகத்துக்குச் சிகரம் வைத்தாற் போல அமைந்தது. துரோகம் என்ற சொல்லை நாம் கையாளும் பொழுது, அதை மிகப் பொறுப்புணர்ச்சியுடனேயே கையாள்கிறோம் என்பதைக் குறிப்பிட வேண்டும். திரு. பொன்னம்பலத்தின் அரசியல் நடவடிக்கையை விளக்குவதற்கு அந்தவார்த்தையைவிட வேறு பொருத்தமான வார்த்தை இல்லை.

திரு. பொன்னம்பலம் அன்று ஒரு தனி மனிதர் என்ற முறையில் பாராளுமன்றத்துக்குத் தேர்ந்து எடுக்கப்பட்டவர் அல்ல. சில அடிப்படை இலட்சியங்களைக் கொண்ட ஒரு அரசியல் இயக்கத்தின்—தமிழ் காங்கிரசின் பிரதிநிதியும் தலைவரும் என்ற முறையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### காங்கிரசின் நோக்கங்கள்

அன்றைய காங்கிரஸ் கட்சியின் முக்கிய அடிப்படை நோக்கங்கள்—குறிக்கோள்கள் யாவை? திரு. பொன்னம்பலம் அவற்றை அரசியல் வசதி காரணமாக மறந்து விட்டாலும், நாம் அதை இந்தக் கட்டத்தில் நினைவு கூருவது நல்லது.

அமைப்பு விதி இரண்டு— நோக்கமும் குறிக்கோளும்

அ. இ. த. காங்கிரசின் நோக்கங்கள் பின்வருவனவாகும்:-

இலங்கைக்குச் சுயராச்சியம் (பூரண சுதந்திரம்) பெறுதல்.

இலங்கையிலுள்ள எல்லா சமூகங்களுக்கும் அவர்களுக்குரிய பண்பாட்டு சுதந்திரத்தைச் சாதித்தல்.

இலங்கையில் வாழும் சகல மக்களுக்கும் சுயநிர்ணய உரிமையைச் சாதித்தல் (The recognition of the right of the self-determination for the peoples of Ceylon.)

பொதுவான இனம்—பாரம்பரிய பண்பாடு இவற்றின் அடிப்படையில் ஒரே சமூகத்தினரான இலங்கைவாழ் தமிழ் மக்களது பிரிவற்ற ஒற்றுமையைச் சாதித்தல்.

இலங்கை வாழ் இந்தியர் இந்நாட்டு குடிமக்களாகித் தம் கடமைகளை நிறைவேற்றி அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்கு இடையூறாகவுள்ள இடர்ப்பாடுகளை (Disabilities) நீக்குதல்.

குடியுரிமைச் சட்டங்கள், வாக்குரிமைச் சட்டம் இவற்றை திரு. பொன்னம்பலம் ஆதரித்த பொழுது மேற் கூறிய காங்கிரசின் உயிரோட்டமுள்ள புனித நோக்கங்கள் — குறிக்கோள்கள் ஒவ்வொன்றையும் ஆளக் குழி தோண்டி நீளப் புதைத்து விட்டார் 'தனிப் பெருந் தலைவர்' இன்று எஞ்சியிருக்கும் காங்கிரஸ் கட்சி வெறும் உயிரற்ற உடல் அல்லவா?

1947ம் ஆண்டுத் தேர்தல் முடிவு சோல்பரி ஒற்றையாட்சி அரசியற் திட்டத்தைத் தமிழ் மக்கள் நிராகரித்து விட்டார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுஎன்று திரு. பொன்னம்பலம் குடியேற்ற நாட்டு அமைச்சருக்குத் தந்தி கொடுத்தார். உண்மையும் அதுதான்.

### கொள்கை குட்டிச்சுவரானது

சோல்பரி அரசியல் திட்டத்தை ஏற்று யூ. என். பி. யில் போட்டியிட்ட சேர் அ. மகாதேவா 9100 அதிகப்படியான வாக்குகளால் யாழ்ப்பாணத்தில் தோற்கடிக்கப்பட்டார்.

யூ. என். பிக்குப் போடுகிற ஒவ்வொரு வாக்கும் தமிழ் மக்களின் அடிமைத்தளைக்குப் போடுகிற பூட்டு என்று தமிழ் காங்கிரஸ் பிரசாரம் செய்தது.

அதுமட்டுமல்ல திரு. மகாதேவா போன்றோர் தேர்தலில் வெற்றிபெற்று பாராளுமன்றம் போனால், தமிழ் மக்களை சிங்கள—பௌதத சேனநாயக்காவுக்கு விலைபேசி விற்று விடுவார்கள் என்று திரு. பொன்னம்பலம் கர்ச்சித்தார்.

அப்படிக் கர்ச்சித்த பொன்னம்பலம் அவர்களே அந்தக் கைங்கரியத்தைக் கச்சிதமாகச் செய்து முடித்தார். ஒரு வருடம் கூட அவரால் பல்லைக் கடித்துக்கொண்டு இருக்க முடியவில்லை.

1947ல் யூ. என். பி. க்கு இருந்த எதிர்ப்பு தொடர்ந்து 1948, 49ல் இருந்திருக்குமானால் குடியுரிமைச் சட்டங்களைக் கொண்டு வர பெரிய சேனநாயக்கா ஒரு முறைக்குப் பலமுறை யோசித்திருப்பார். குறைந்தது அந்தச் சட்டங்களின் விசத்தன்மையாவது குறைந்திருக்கும்.

### பாராளுமன்ற பலம்

1947ம் ஆண்டு தேர்தல் முடிவு 95 இடங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் யூ. என். பிக்கு 42இடங்களை மட்டும் கொடுப்பதாக இருந்தது. பெரிய சேனநாயக்கா பல சுயேச்சைகளை வலைபோட்டுப் பிடித்தார். சுயேச்சையாக வென்று வந்த திரு சுந்தரலிங்கம், மன்னாரில் யூ. என். பி. வேட்பாளரைத் தோற்கடித்து சுயேச்சையாக வந்த திரு. சிற்றம்பலம் இவர்களுக்கு ஆளுக்கொரு முழு அமைச்சர் பதவி கொடுத்து வலைக்கு வாங்கினார். கல்குடா திரு. நல்லையா அரை [illegible] பதவியுடன் மட்டும் இருத்திப்பட்டுக் கொண்டார்.

இப்படி சுயேச்சைகள் கண்ணிவைத்துப் பிடிக்கப்பட்டும் சேனநாயக்காவின் அரசாங்கம் சிறுபான்மை அரசாங்கமாகவே இருந்தது. நியமன உறுப்பினர்கள் யூ. என். பிக்கு மீண்டு கொடுத்து அதைப் பிழைக்க வைத்தார்கள்.

சபாநாயகர் பதவிக்கு யூ. என். பி. சார்பாகத் திரு. மொலமுரேயும், எதிர்க் கட்சிகள் சார்பாகத் திரு. நிசங்காவும் போட்டியிட்ட பொழுது 3 அதிகப்படியான வாக்குகளினாற்றான் (52-49) திரு. மொலமுரே வெற்றி பெற முடிந்தது.

இந்த அரசியற் பின்னணியில் பார்க்கும் பொழுது தமிழ் காங்கிரஸ் அன்று அரசாங்கத்தைப் பாராளுமன்றத்துக்கு உள்ளேயும்—வெளியேயும் கடுமையாக எதிர்த்திருந்தால் நமது உரிமைகள் கொள்ளை போவதைத் தடுத்திருக்கலாம். குடியுரிமைச் சட்டங்களுக்குச் சாதகமாக ஒத்துழைப்புத் தமிழர்கள்—காங்கிரஸ் எதிர்க்கும் பொழுது நிச்சயமாக வாக்களித்திருக்க மாட்டார்கள்.

### மக்கள் சக்தி

அன்று பெரிய சேனநாயக்காவின் அமைச்சரவையிலும் அரசாங்கத்திலும் இடம் பெற்ற தமிழ்ப் பிரதிநிதிகள் அனைவரையும் தமிழ் மக்கள் அடியோடு வெறுத்தார்கள். அவர்களைக் காட்டிக் கொடுக்கும் எட்டப்பர் கூட்டமாகவே தமிழ் மக்கள் கணித்தார்கள்.

குறிப்பாக அமைச்சர் சுந்தரலிங்கத்தை தமிழ் பேசும் மக்கள் காறி உமிழாத குறை. அவ்வளவு தூரம் அவர் தமிழ் மக்களது ஏகோபித்த எதிர்ப்புக்கும்—வெறுப்புக்கும் இலக்காக இருந்தார்.

'ஐக்கிய இலங்கையை' வற்புறுத்து முகமாக கொழும்பில் யூ. என். பி. தமிழர்களால் கூட்டப் [illegible] கூட்டம் ஆரம்பமாகி 10 நிமிடங்களில் குழப்பத்தில் முடிந்துவிடும். அந்த கூட்ட மேடைகள் தமிழ் காங்கிரஸ் மேடையாக மாறி திரு. பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம் இவர்களுடைய பேச்சோடு இனிது முடியும்.

அவ்வளவு தூரம் 1947—1948 முற்பகுதியில் தமிழ் காங்கிரஸ் கட்சி தமிழ் மக்களின் இதய வேட்கையை – சுதந்திர வேட்கையைப் பிரதிபலிக்கும் ஒரே கட்சியாக இருந்தது.

### துரோகத்தின் ஆழ — நீளம்

அந்தக் கட்சியும், அதன் தலைவரும் மட்டும் இலட்சியத்தை அமைச்சர் பதவிக்கு விலை கூறாது, பாதை தவறாது, சிங்கள பௌத்த யூ. என். பி. வகுப்புவாதக் கட்சிக்கு எதிரான எதிர்ப்புணர்ச்சியை கைவிடாது, சுருக்கமாகச் சொன்னால் தமிழ் மக்களுக்கு துரோகம் செய்யாது, 30 இலட்சம் தமிழ் பேசும் மக்களது அரசியல் சுயநிர்ணய உரிமைக்கு தொடர்ந்து போராடியிருந்தால் தமிழினத்தின் வரலாறு இன்று வேறுவிதமாக இருந்திருக்கும்.

திரு. பொன்னம்பலம் அவர்களது துரோகத்தின் ஆழ—நீளம் இப்போது புரிகிறதா? அந்த வார்த்தைப் பிரயோகம் சரியென்பது தெரிகிறதா?

குடியுரிமைச் சட்டங்கள் தமிழ் மக்களின் சரிபாதித் தொகையினரை ஐயப்பாட்டுக்குரிய குடிமக்களாகவும், மீதிப் பகுதியினரை நாடற்றவர்களாகவும் ஆக்கியதைப் பார்த்தோம். தேர்தற் திருத்தச் சட்டம்நாடற்றவர்களது வாக்குரிமையையும் பறித்தது.

இந்தத் திருத்தச் சட்டத்தின் விளைவாக 2,35,000 தமிழ்த் தொழிலாளர்களது பெயர்கள் தேர்தல் இடாப்பிலிருந்து அகற்றப்பட்டன!

### டட்லியின் அன்றைய நிலை

1947ல் இலங்கை இந்திய காங்கிரஸ் பிரதிநிதிகள் 8பேர் பாராளுமன்றத்தில் இருந்தார்கள். 1952ல் அவர்களில் ஒருவர்கூட பாராளுமன்றத்துக்கு வர முடியவில்லை!

கொட்டகலை பா. உறுப்பினராக இருந்த திரு. குமாரவேலு அவர்களுடைய பெயரே 1952 தேர்தல் இடாப்பில் இடம் பெறவில்லை!

திரு. டட்லி சேனநாயக்கா 1952 தேர்தலில் சிங்கள மக்களைப் பார்த்து வெற்றிப் பெருமிதத்துடன் சொன்னார் 'இராமசாமிக்கும் மீனாட்சிக்கும் வாக்குரிமை இல்லாமல் செய்த கட்சி யூ. என். பி. கட்சி. எனவே எங்களைப் பாராளுமன்றத்துக்கு தெரிந்தனுப்புங்கள்?

'தனிப் பெருந் தலைவர்' அப்பொழுதும் டட்லி சேனநாயக்காவிற்கும் அவரது யூ. என். பிக்கும் சேவகம் செய்து கொண்டு இருந்தார்.

### நமது பிரதிநிதித்துவம்

இலங்கைக்கு "சுதந்திரம்" வழங்கிய சோல்பரி ஆணைகுழு சிறுபான்மையினருக்கு 37 பாராளுமன்ற இடங்கள் கிடைக்குமென்று மதிப்பிட்டார்கள். அதன் விபரம் பின்வருமாறு:-

(14-ம் பக்கம் பார்க்க)

ஆனந்தா லேகியம்
இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

ANANDA MEDICAL HALL TRADE MARK 174 SEA STREET, COLOMBO 11

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, பிரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை;
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இலவசமாக அனுப்புவோம்.
பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3.00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1965 மார்ச் மாதம் 21-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலே பேசி எண் : 3411 த. பெ. 1183


# மார்ச் 22-ந் திகதி

நாளை — திங்கட்கிழமை தமிழ் பேசும் இனத்தினது உரிமைப்போராட்டத்தின் ஒரு முக்கிய நாள். இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் ஒரு பகுதியினரிடம் இன்று எஞ்சியுள்ள ஒரே உரிமை வாக்குரிமையே. அவர்கள் அந்த உரிமையை உபயோகித்து தங்களின் பிரதிநிதிகளை நாளை தெரிவுசெய்வர்.

இலங்கை அரசியல் வானிலே தமிழ் பேசும் இனத்துக்குச் சாதகமான ஒரு சூழ்நிலை இத்தேர்தலிலே உருவாகி வருகிறது அதுதான் தென்னிலங்கையில் சிங்களக் கட்சிகளிடையே ஏற்பட்டுள்ள பலத்த போட்டி. சிங்களக் கட்சிகள் அனைத்தும் இடதுசாரி வலதுசாரி என்னும் இரு முகாம்களில் அணிவகுத்துநின்று மோதுகின்றன. இதன் விளைவாக எந்த முகாமும் பெருவாரியான பெரும்பான்மையைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலை ஏற்படும்போது இரண்டிலொன்று தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளின் ஆதரவை நாடவேண்டிய கட்டாயம் ஏற்படும். இனத்தின் உரிமைகளை ஓரளவு பெற இந்த வாய்ப்பை தமிழ் பேசும் பிரதிநிதிகள் சரிவரப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

தமிழ் பேசும் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் ஒரே குழுவாகக் கட்டுப்பாட்டுடன் இணைந்து செயற்பட்டாற்றான் அத்தகைய ஒரு வாய்ப்பைச் சரிவரப் பயன்படுத்த முடியும். நிபந்தனையின்றி சரணாகதி அடைபவர்களையும், நிலையான ஒரு கொள்கையற்ற சுயேச்சைகளையும் பதவிக்காக சொந்த இனத்தைக் காட்டிக்கொடுக்கும் எட்டப்பர்களையும் தெரிவுசெய்தால், அவர்கள் தத்தம் தொந்தி தொப்பைகளை நிரப்பிக்கொள்பவர்களேயன்றி இனத்தின் நலனை முன்னிட்டு ஒரே அணியில் இணைந்துநின்று செயல்படமாட்டார்கள். அதனால் பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் மக்களின் வலிமை பெருமளவு குறைந்துவிடுவதோடு அவர்கள் பின்னால் தள்ளப்பட்டுவிடுவார்கள்.

ஆகையாற்தான் தமிழரசுத் தந்தை வாக்காளர்களுக்கு விடுத்துள்ள ஒரு விசேட செய்தியில் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் 20 பேர்களையும் தெரிவுசெய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

தமிழ் பேசும் மக்களுக்கு உரிமைகளை வழங்கினாலன்றி எந்தச் சிங்களக் கட்சியும் ஆட்சி செலுத்த முடியாது என்ற நிலையை மீண்டும் ஏற்படுத்தவேண்டுமானால், குன்றாத பலத்துடன் 20 பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு தமிழரசுப் போர்ப்படை பாராளுமன்றத்தில் அணிவகுத்து நிற்கவேண்டும்.

கடந்த பாராளுமன்றத்தில் தமிழரசுப் பிரதிநிதிகளிடையே எத்தகைய கட்டுப்பாடும், ஒழுங்கும், நிரமும் இருந்தன என்பதையும், பட்டம் பதவிகளை துச்சமென உதறித்தள்ளி, சதா இனத்தின் விடுதலையே உள்ளத்தில் கொண்டு இதர கட்சிகளும் அஞ்சும்வண்ணம் ஒரே மனிதனைப்போல எவ்வாறு செயலாற்றினார்களென்பதையும் ஆராய்ந்துபார்த்தால், இன்று 20 பேர்களையும் தெரிவு செய்து ஒரே அணியில் நிறுத்தவேண்டிய அவசியத்தை மக்கள் அறிவர்.

வெறும் தேர்தல் கட்சிகளை நம்புவதால் தமிழ் முஸ்லிம் மக்களுக்கு எத்தகைய நன்மையும் ஏற்படப்போவதில்லை. காரணம், இந்த இற்றை ஆட்சிமுறையிலே பாராளுமன்றத்தில் சொற்போர் நிகழ்த்துவதால் மட்டும் மக்கள் தங்கள் அடிப்படை உரிமைகள் அனைத்தையும் பெற்றுவிட முடியாது அவற்றைப் பெற பாராளுமன்றத்துக்கு வெளியே மக்கள் போராட்டங்களையும் நடத்தவேண்டியது அவசியமாகும். தேர்தலையே ஒரே நோக்கமாகக் கொண்ட ஒரு கட்சியால் வெகுசன போராட்டங்களை நடத்தவோ, தியாகஞ் செய்யவோ முடியாது. ஆகையாற்தான் தமிழ் காங்கிரஸ், இடதுசாரிகள் என்போரை மக்கள் அடியோடு நிராகரித்துவிட வேண்டுமென்று வற்புறுத்துகின்றோம்.

தமிழரசுக்கட்சி வெறும் தேர்தல் கட்சியன்று. பாராளுமன்றத்தில் மட்டுமின்றி வெளியிலும் போராட்டங்களை நடத்தும் வீரமும், தியாக உணர்ச்சியும், உறுதியான கொள்கையும், அசைக்க முடியாத உறுதிப் பாடும் கொண்ட ஒரே கட்சி தமிழரசுக் கட்சியே! கட்சியின் வரலாறே இதற்குச் சான்று.

சத்தியாக்கிரகம், சிறி எதிர்ப்புப் போர், திருமலை யாத்திரை, பாதயாத்திரை போன்ற மக்கள் இயக்கங்களை பாராளுமன்றத்துக்கு வெளியே நடத்தி பலவித இன்னல் இடர்பாடுகளையும் அனுபவித்து, தியாகங்கள் பல புரிந்த ஒரே கட்சி தமிழரசுக் கட்சியே.

ஆகவே பாராளுமன்றப் போராட்டத்தையும் வெகுசனப் போராட்டங்களையும் ஒருங்கே நடத்தக் கூடிய-நடத்தி வந்த தமிழரசுக் கட்சியை மட்டுமே தமிழ், முஸ்லிம் மக்கள் தெரிவு செய்ய வேண்டும். தென்னிலங்கையில் இடதுசாரி வலதுசாரி முகாம்கள் தமிழரசுப் பிரதிநிதிகள் எத்தனை பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவர் என்பதை அறிய பெரிதும் ஆவல் கொண்டுள்ளன. ஏனெனில் பாராளுமன்றத்தில் தமிழ் பேசும் இனத்தின் வலிமை தமிழரசுப் பிரதிநிதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்திருப்பது தான். எண்ணிக்கை குறைந்து விட்டால் வலிமை குறைந்துவிடும்-வலிமை குறைந்து விட்டால் உரிமைகளை வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படாது என்பது இவ்விரு முகாம்களின் கணிப்பு. இதிலிருந்து கட்சியின் 20 வேட்பாளர்களையும் தெரிவு செய்து தமிழ், முஸ்லிம் மக்களின் வலிமையைப் பெருக்க வேண்டியது மிக மிக அவசியமென்பது தெளிவாகிறதல்லவா?

# தமிழரசுக்கே இளைஞர்கள் வாக்களிக்க வேண்டும்

## பொதுச் செயலாளரின் விசேட வேண்டுகோள்

'தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை ஓரளவுக்காவது வழங்காமல் நிலையான ஆட்சியை ஏற்படுத்த முடியாது என்ற உண்மையை சகல சிங்களக் கட்சிகளும் உணரும் நிலையைப் பாராளுமன்றப் போராட்டத்தின்மூலம் இலங்கைத் தமிழரசுக் கட்சி உருவாக்கியுள்ளது. மேலும் எமது சுயநிர்ணய சுதந்திர உரிமையைப் பெறுவதற்கு பாராளுமன்றத்துக்கு வெளியிலும் கட்டுப்பாடான முறையில் போராடவேண்டியவர்களாய் உள்ளோம். இந்தப் போராட்டத்தை வெற்றியுடன் நடாத்திமுடிக்க வேண்டியவர்கள் வாலிபர்களே. எனவே வாக்குரிமை பெற்ற வாலிபர்கள் இனத்தின் விடுதலை இயக்கமான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே வாக்களித்து அனைவரையும் வெற்றிபெறச் செய்யவேண்டும்.'

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பொதுத் தேர்தலையொட்டி சுதந்திரன்மூலம் தமிழ் பேசும் மக்களுக்கு விடுத்துள்ள ஒரு விசேட வேண்டுகோளில் கூறியுள்ளார்.

அவ்வேண்டுகோளில் மேலும் அவர் கூறியிருப்பதாவது:

'எமது எதிர்காலம் இந்நாட்டில் ஓர் மலர்ப்பாதையாக நிச்சயம் இருக்கப் போவதில்லை. விடுதலைப் போர் நடத்துபவர்கள் இன்னலையும் இடர்ப்பாட்டையும், அடக்குமுறையையும், அதிகாரத்தையும் சிரித்த முகத்துடன் தாண்ட வல்லவர்களாக இருக்கவேண்டும். இந்த அடிப்படையில் கட்டுக்கோப்பாக நின்று செயற்படக்கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் அனைவரையும் ஒருமனதாக வெற்றிபெறச் செய்ய வேண்டியது தமிழ் பேசும் மக்களின் தலையாய கடமையாகும்.

### வாக்குறுதியை காப்பாற்றினோம்

'தமிழரசுக் கட்சி கடந்த 16 வருடங்களாக வாக்காளப் பெருமக்களுக்கு கொடுத்துவந்த வாக்குறுதியைக் காப்பாற்றிவந்துள்ளது. தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை வழங்காத எந்த அரசாங்கத்துடனும் ஒத்துழைக்க மாட்டோம் என்று கூறி,இந்நாட்டின் ஆட்சியை இரு தடவைகள் வீழ்ச்சியுறச் செய்துள்ளோம்.

'இன்று தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை ஓரளவுக்காவது வழங்காமல் நிலையான ஆட்சியை ஏற்படுத்த முடியாது என்ற உண்மையை சகல சிங்களக் கட்சிகளும் உணரக்கூடிய நிலையை தமிழரசுக் கட்சி தனது பாராளுமன்றப் போராட்டத்தின் மூலம் ஏற்படுத்தியுள்ளது. மேலும் எமது சுயநிர்ணய சுதந்திர உரிமையைப் பெறுவதற்கு பாராளுமன்றத்துக்கு வெளியிலும் கட்டுப்பாடான போராட்டத்தை நாம் நடத்தவேண்டியவர்களாக உள்ளோம்.

'இந்த உண்மையை மனதில் வைத்து ஈழத்தமிழகத்திலுள்ள ஒவ்வொரு தமிழ் பேசும் வாக்காளரும் மார்ச் 22-ம் திகதித் தேர்தலை உன்னதமான முறையில் பயன்படுத்தவேண்டும்.

### வாலிபர்களுக்கு அழைப்பு

'இந்த நேரத்தில் இளம் வாலிப வாக்காளர்களுக்கு குறிப்பாக ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விடுதலை இயக்கங்களின் முன்னோடிகள் இளைஞர்கள். உங்களுக்குக் கிடைத்திருக்கும் வாக்குகளை தமிழரசுக் கட்சிக்குக் கொடுப்பதுடன் உங்கள் கடமை முடிந்துவிடவில்லை. தமிழ்பேசுமினத்தின் சுதந்திர சுயநிர்ணய உரிமைக்காக பாராளுமன்றத்துக்கு வெளியில் நடைபெறும் சகல போராட்டங்களையும் வெற்றிபெறச் செய்யவேண்டிய மகத்தான பொறுப்பு தங்களைச் சார்ந்துள்ளது என்பதை மறந்து விட வேண்டாம்.

'அண்மையில் தமிழ் நாட்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை வெற்றிகரமாக நடாத்தி முடித்தவர்கள் வாலிபர்கள். ஏன்? 1961-ம் ஆண்டு நாம் நடாத்தியபோராட்டத்தின் போது நீங்கள் காட்டிய ஒத்துழைப்பு மகத்தானது என்பதை நாம் அறிவோம். நாடு அறியும். எனவே பொய்யர்களினதும் புரட்டர்களினதும் ஏமாற்றுப்பிரச்சாரத்தில் மயங்கிவிடாது விடுதலை இயக்கமாம் தமிழரசுக் கட்சியை வெற்றிபெறச் செய்யுங்கள் என்று இனத்தின் சார்பில் வாலிபர்களாகிய உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

### திருமலைத் தீர்மானம்

'நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலைத் தமிழ் பேசும் மக்கள் ஒரு பொதுமக்கள் வாக்கெடுப்பாக, சுயநிர்ணய சுதந்திர உரிமையைத் தீர்மானிக்கும் ஒரு வரலாற்று நிகழ்ச்சியாக, சமஷ்டி அரசமைப்புக் கோரிக்கையை வலியுறுத்தும் ஒரு பெரும் வாய்ப்பாக, தமிழரசுக் கட்சியின் அரசியல் நடவடிக்கைகளை உறுதிப்படுத்தும் ஓர் அங்கீகார முத்திரையாகப் பயன்படுத்த வேண்டும்.

'தமிழரசுக் கட்சியின் திருமலைத் தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கும் நான்கு அம்சக் கோரிக்கையே இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் இதயகீதம் என்பதைப் பதிவாகும் வாக்குகளின் எண்ணிக்கை உலகுக்கு ஐயந்திரிபுகளுக்கு இடமின்றி எடுத்துக்காட்ட வேண்டும்.

'ஆகவே மார்ச் 22-ம் நாள் ஒவ்வொரு வாக்காளரும் தவறாது வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று தமது வாக்கினை தமிழரசுக் கட்சிக்கே அளிக்க வேண்டுமென்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் பணிவாக வேண்டுகிறேன்.

அத்துடன் இத்தேர்தல் தமிழ் பேசும் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டுமா, வேண்டாமா என்பதை நிர்ணயிக்கும் ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகும். எனவே தமிழ் பேசும் மக்கள் தமிழரசுப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதின் மூலம் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையைத் திட்டவட்டமாக நிலைநிறுத்த வேண்டும். இதில் இருவித கருத்துக்கு இடமேயும் இடம் கிடையாது.

கட்சிக்குச் சாதாரண வெற்றி போதாதென்றும், ஒவ்வொரு தமிழரசு வேட்பாளரும் பெருவாரியான மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட வேண்டுமென்றும் தமிழரசுத் தந்தை தமது வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழரசுப் பிரதிநிதிகள் பெறும் மேலதிக வாக்குகளின் எண்ணிக்கையைப் பொறுத்தே நம் மக்களின் உரிமை உணர்ச்சியையும் திடசங்கற்பத்தையும் இந்நாடும் உலக நாடுகளும் மதிப்பிடும். இதனை ஒவ்வொரு தமிழ், முஸ்லிம் வாக்காளரும் நன்கு குறித்துக் கொண்டு தமிழரசுத் தந்தையின் வேண்டுகோளை நிறைவேற்றி வைத்தல் வேண்டும்.

தமிழரசுக் கட்சிக்குக் கொடுக்கும் ஒவ்வொரு வாக்கும் அரசியல் நேர்மைக்கும், திடமான கொள்கைக்கும், தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்கும், எதிர்கால சந்ததியின் நல்வாழ்வுக்கும், தமிழ் பேசும் மக்களின் ஐக்கியத்துக்கும் கொடுக்கும் வாக்காகும். இதனை எந்த வாக்காளரும் மறந்து விடக் கூடாது.

"தமிழ், முஸ்லிம் மக்களின் ஒவ்வொரு வாக்கும் புனிதமானது எனவே ஒரு வாக்கும் வீணாகிவிடக் கூடாது. நாளை ஒவ்வொரு வருவம் தவறாது வாக்களிக்க வேண்டும். ஒவ்வொரு வாக்கும் சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்காக அளிக்கப்பட வேண்டும்." இதுவே இந்நெருக்கடியான கட்டத்தில் தமிழ் பேசும் மக்களுக்கு "சுதந்திரன்" விடுக்கும் வேண்டுகோள்.

# தமிழ் தட்டெழுத்தாளருக்கு புதிய நிபந்தனை

தமிழ்த் தட்டெழுத்தாளர்களின் பதவி உயர்வுப் பரீட்சை மே மாதம் 8, 9-ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. இப் பரீட்சைக்குப் புதிதாக இரு நிபந்தனைகளை நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவின் நிர்வாகத்தின் கீழ் உள்ள திறைசேரி இம்மாதம் 15-ம் திகதி வெளியிட்டுள்ள ஜி. 60-ம் இலக்க சுற்று நிருபத்தின் மூலம் விதித்துள்ளது.

பரீட்சைக்கு மனுச் செய்யும் தட்டெழுத்தாளர்கள் சிங்களத் தகுதிகாண் பரீட்சையில் ஐந்தாம் தரம் சித்தியெய்தியிருக்க வேண்டும். தரம் உயர்வுப் பரீட்சையில் சிங்களத் தட்டெழுத்தாளர்கள் அல்லாத தமிழ், ஆங்கிலத் தட்டெழுத்தாளர்கள் சிங்களத் தட்டெழுத்து நிமிடத்துக்கு பதினைந்து எழுத்துக்கள் வேகத்தில் அடிக்க வேண்டும்.

இப்புதிய நிபந்தனைகளினால் தமிழ்த் தட்டெழுத்தாளர்கள் (ஆங்கிலத் தட்டெழுத்தாளர்களாக உள்ள தமிழர்கள் உட்பட) பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை தோன்றியிருக்கிறது.

தமிழர்களுக்கு சலுகை வழங்குவோம், என்று நிதி அமைச்சர் டாக்டர் பெரேரா வட மாகாணத்தில் உறுதி வழங்கி முழுதாக ஒரு வாரம் கழிய முன்னர் இப் புதிய நிபந்தனை அடங்கிய சுற்று நிருபம் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் இனத்தை தட்டிக்கழிக்க முடியாது

## தமிழ் காக்கும் பணியில் தன்னுயிர் ஈய்ந்த உத்தமன்



அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின பருத்தித்துறைத் தொகுதிக்கு வருகை புரிந்த பொழுது இன்றைய தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு. நடராசா அன்னாரை வரவேற்றார். ஆனால் ஊர்காவற்துறைத் தொகுதிப் பிரதிநிதியாகவிருந்த தமிழ்த் தொண்டன் திரு. வே. சு. கந்தையா அமைச்சரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தார். பொலீசாரின் பொல்லடிக்கு மிகக் கேவலமான முறையில் இலக்கானார். அமைச்சரின் விஜயம் அண்ணல் கந்தையாவின் உயிரையே பலிவாங்கியது.

தமிழர் மானம் காக்கும் பணியில் உடமைகளை மட்டுமல்ல உயிரையும் இழக்கத் தமிழரசுத் தலைவர்கள் தயங்க மாட்டார்கள் என்பதற்கு வேறு என்ன வேண்டும்?

## தமிழரசு வேட்பாளர்கள்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய சுதந்திர உரிமை பெறுவது என்ற புனித நோக்கத்திற்கு பயன்பட வேண்டும்.

'தமிழ் பேசும் மக்களிற் சரிபாதிப் பேர் வாக்குரிமையற்றவர்களாக்கப்பட்டுவிட்டார்கள். எஞ்சியிருக்கும் வட—கிழக்கு மாகாணத் தமிழ் பேசும் மக்கள் பல உரிமைகளை இழந்து விட்டார்கள். இதுவரை இழக்காமல் இருக்கும் ஒரே ஒரு உரிமை; வாக்குரிமை மட்டும் தான். இந்த வாக்குரிமையைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மக்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தின் சில கட்டங்களைக் கடக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

'எனவே தமிழ் பேசும் மக்களது ஒவ்வொரு வாக்கும் மிகப் பெறுமதியானது. ஒரு வாக்குத்தானும் பயன்படுத்தப்படாமல் அவம் போக விடக்கூடாது.

### ஒற்றையாட்சி ஒரு சிறைச்சாலை

'இலங்கை வாழ் தமிழ் பேசுமினம் ஆட்சி அதிகாரம் அற்று, தம் முடைய தலைவிதியைத் தாமே நிர்ணயிக்கும் உரிமையற்று— அதாவது எந்த இனத்துக்கும் அத்தியாவசியம் தேவைப்படும் சீரிய சுயாட்சி உரிமை மறுக்கப்பட்டு ஒற்றை ஆட்சி அரசமைப்பின் கீழ் சிறைபுண்டு கிடக்கிறது.

'இந்த அரசமைப்பின் கீழ் பெரும்பான்மை மக்களாகிய சிங்கள இனத்துக்குள் மட்டும் கூடுதலான வாக்குகளைக் கவரக் கூடிய கட்சி, தமிழ் பேசும் மக்கள் உட்பட இலங்கை முழுவதையும் ஆளும் அதிகாரத்தை சம்பிரதாயமாகவும், சட்ட பூர்வமாகவும் பெறுகிறது. இந்த நிலையில் நோக்குகையில் தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் பெறுமதியற்றனவயாகி விடுகிறதென்றே கருத வேண்டியிருக்கிறது. ஆகவே, தமிழ் பேசும் மக்களின் நலவுரிமைகள் புறக்கணிக்கப்படுகின்றன. இதனால் தமிழ் பேசுமினம் புறக்கப்பட்டு அடிமை நிலையை அடைகிறது. ஆட்சிப் பொறுப்பில் பங்கு கிடையாது. எனவே, ஆளப்படும் அடிமை நிலைக்கு தமிழ் பேசுமினம் தள்ளப்படுகிறது.

### இணையாட்சியின் சிறப்பு

'இந்த நிலை பல்வேறு இன மக்கள் வாழும் நாட்டில், ஒற்றையாட்சி அரசமைப்பில் இயல்பாக உள்ளது. ஆனால், சமஷ்டி இணைப்பிலே இந்த நிலைக்கு இடமில்லை. தமிழ் பேசுமினம் தம்மை ஆட்சி புரிபவர்களைத் தமது வாக்குப் பலத்தைக் கொண்டே தீர்மானிக்கும் நிலை சமஷ்டி இணைப்பாட்சியில் தோன்றுகிறது. அதே போன்று சிங்கள மக்களும் தமது தலைமையைத் தேடிக் கொள்கிறார்கள். சமஷ்டி இணைப்பாட்சியில் தமிழ் பேசும் மக்களின் சீவாதார உரிமைகளான மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு பாதுகாக்கப்படும் சந்தர்ப்பம் கிட்டும் இணைப்பு ஆட்சி உதயமாகிறது. இன்றைய ஒற்றையாட்சி அரசமைப்பில் தமிழ் பேசுமினத்துக்கு இந்த மேலான சுயாட்சி நிலை மறுக்கப்பட்டுள்ளது.

'இந்த ஒற்றையாட்சி என்ற ஓரவஞ்சனை நிறைந்த ஆட்சியிலிருந்து எம்மினத்தை விடுவிப்பதற்கு இருக்கும் உறுதியான ஒரேயொரு மார்க்கம் இணைப்பாட்சி என்ற சமஷ்டி ஏற்படுத்துவது மட்டுமே.

'எமது தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பு பெரும்பான்மைச் சிங்கள இனத்திடமிருந்து அகற்றப்பட வேண்டும். எம்மை ஆக்கவும் அழிக்கவும் வல்ல உரிமை எமக்கே அளிக்கப்பட வேண்டும். தமிழ் பேசுமினத்தின் ஆட்சியை உருவாக்கும் பணி தமிழரசுக்கே கிடைக்க வேண்டும்.

### பொது மக்கள் வாக்கெடுப்பு

'இந்த இலட்சியமே எமது இதய கீதம் என்பதை இந்நாட்டில் ஏற்படப் போகும் ஆட்சிக்கு மட்டுமல்ல, சிங்களச் சகோதரர்களுக்கும், வெளியுலகம் அனைத்திற்கும் நாம் ஆணித்தரமாக தெளிவாக்கி விட வேண்டும். இந்த உண்மையை நிரூபிக்க எமக்குக் கிடைத்துள்ள ஒரு அரிய சந்தர்ப்பமே நடக்கவிருக்கும் பொதுத் தேர்தல்.

'தனிப்பட்ட குரோதங்களோ, விரோதங்களோ, சிறு மன்களோ, வசதியீனங்களோ ஒரு பேரினத்தின் கடமைக்கு பெரிதல்ல.

'எனவே தமிழ் பேசும் பேரினத்தின் வாக்காளப் பெருமக்களை மீண்டும் அறிவிறுயத்துட வேண்டுகிறேன்;

'பொது மக்களின் வாக்கெடுப்பு நன்னாள் மார்ச் 22 ம் நாள். அப்பொன்னாளின் முதற் பணியாக, வாக்களிப்பு நிலையங்களில் இலட்சோப இலட்சமாகத் திரண்டு, தமிழரசுக் கட்சிக்கு வாக்களித்து, தமிழ் பேசுமினத்தின் மகத்தான எதிர்காலத்துக்கு வழி அமையுங்கள் என்று தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

'தமிழ் பேசும் மக்களுக்கு வேண்டுவது ஒரு வீடு! தமிழரசுக் கட்சியின் சின்னம் ஒரு வீடு!!'

## மா பெரும் கூட்டம்

### யாழ். முற்றவெளியில்

யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் இலங்கைத் தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் அனைவரதும் சார்பில் 19ம் திகதி பிற்பகல் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில், மாபெரும் பிரச்சாரக் கூட்டம் ஒன்று நடைபெறும். இக் கூட்டத்திற்கு தமிழரசுத் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம் தலைமை தாங்குவார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் போட்டியிடும் பதினொரு வேட்பாளர்களுடன், தமிழரசுக்கட்சி மாதர் முன்னணியின் சார்பில் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கமும், தமிழரசு வாலிப முன்னணியின் சார்பில் திரு. ஆலாலசுந்தரமும், இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் சார்பில் திரு. மு. எல்லாளனும், மாணவர் மன்றத்தின் சார்பில் பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த திரு. க. தெட்சணமூர்த்தியும், திரு. இ. அப்பாத்துரையும் உரை நிகழ்த்துவார்கள். கூட்ட முடிவில் விசேட பஸ் வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாக தமிழரசுக்கட்சித் தலைமை நிலையம் அறிவித்துள்ளது.

## இராசமாணிக்கத்தின் வேண்டுகோள்

**தமிழ் பேசும் இனத்தைத் தட்டிக்கழித்துவிட்டு இந்நாட்டில் நிலையான ஒரு ஆட்சியை ஏற்படுத்த முடியாது. தமிழ் பேசும் மக்களின் தலைவர்கள் ஒரே கருத்துடன் இணைந்து செயற்பட்டால்தான் எதிர்காலம் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் கிடைக்க வாய்ப்பளிக்கும். அரிய சந்தர்ப்பம் ஒன்று காத்துள்ள இவ்வேளையில் தமிழரசைத் தவிர வேறு எதையும் தமிழ் பேசும் வாசகாளர்கள் ஆதரிப்பது கூடாது.**

இவ்வாறு முன்னாள் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. சி. மூ. இராசமாணிக்கம் சுதந்திரன் மூலம் விடுத்துள்ள அறிக்கையில் கூறுகிறார். அவ்வறிக்கை மேலும் கூறுவதாவது:


தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை மீட்டுத்தரும் பணியில் உறுதியுடன் உழைக்கும் ஒரே ஒரு நிறுவனம் தமிழரசுக் கட்சி. இந்த உண்மையினை உலகமே கண்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களைத் தட்டிக்கழித்துவிட்டு இந்நாட்டை வளப்படுத்தவே முடியாது என்ற கருத்தும் பலமுறை ருசுப்படுத்தப்பட்டாய்விட்டது.

இம்முறை நடைபெறும் தேர்தல் தமிழ்பேசும் இனத்துக்கு மகத்தான மாற்றத்தை அளிக்கப்போகிறது. தமிழ் பேசும் சமுதாயம் தலைநிமிர்ந்து வாழப்போகும் வாய்ப்பினை இத்தேர்தல் வழங்கப்போகிறது. இந்த நேரத்தில் நாம் தேர்ந்தெடுத்தனுப்பும் பிரதிநிதிகள் ஒரே அணியில், ஒத்த கருத்துக்கொண்டவர்களாக இணைந்து செயலாற்றத் தவறினால் எமது இனத்துக்கு மீட்சி என்பதே கிடைக்கப் போவதில்லை.

நல்லதொரு சந்தர்ப்பம் நம்மை நாடி வரும்போது நாம் அவற்றை உதாசீனம் செய்துவிடலாகாது. ஆகவே தமிழரசுக்கட்சி வேட்பாளர்களை இம்முறையும் தேர்ந்தெடுத்து எமது பிரதிநிதிகளாக அனுப்புவதை ஒவ்வொரு தமிழ் பேசும் வாக்காளரினதும் தலையாய கடமையெனக் கொள்ளவேண்டும்.

## 'தனிப் பெரும் தலைவருக்கு' மீண்டும் தோல்விதான்




தமிழ் காங்கிரஸ் தலைவரின் அரசியல் உயர்ச்சியையும் வீழ்ச்சியையும் மேலே உள்ள புள்ளி விபரக்கணக்குப் படம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இக்கணக்குப்படி அவர் இம்முறை 5000 வாக்குகளைப் பெற்று தமிழரசுக்கட்சி வேட்பாளர் திரு. மாட்டினிடம் 3750 வாக்குகளால் தோற்பார் என்பது உறுதியாகத் தெரிகிறது. திரு. பொன்னம்பலத்தின் தூரதிருஷ்டியற்ற தன்மையே அவரது அரசியல் வீழ்ச்சிக்கும் காரணம் என்பதை எமது சித்திரக்காரர் மேலும் தெளிவு படுத்தியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஒற்றுமைக்காரர்களின் இனவேட்கை வேடம்

## காங்கிரசின் கபடம் மக்களுக்குப் பாடம்

### தமிழரசே தமிழ் காக்கும்

ஈழவள நாட்டின் எழில் நிறைந்த இயற்கைக் காட்சிகளை ஏழ்மையில் உழன்று வாழும்—வாடும் ஏழை மக்களே பார்த்து அனுபவிக்கிறார்கள் என்றால் மிகையாகாது ஏனெனில் இந்த எழிலை ஊட்டியவர்கள்—ஏற்றத்தை ஏற்படுத்தியவர்கள் தூற்றலுக்கும் ஆளானவர்கள், மலையகத்தில் வாழும் தமிழ் பேசும் தொழிலாளர்களே. இம் மலையக மக்கள் வாழ்க்கை நிலையை, வளப்படுத்தி, நலப்படுத்தி வழிவகைகளைக் காட்டத் துணிவோர் மிகச் சிலரே. எனினும், மலைவாழ் மக்களைக் கேவலமாகக்கருதுவதை மட்டும் தமது தொழிலாகக் கொண்டுள்ளனர் பலர்.

தமிழைக் காத்து வரும் இயக்கம், தமிழரசுக் கட்சியானால், தமிழ் பேசும் இனத்தையே மாற்றானுக்குக் காட்டிக் கொடுத்து வருவதற்கு ஒரு கட்சி—அதுதான் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசு! இந்த, காங்கிரசு தான் தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் ஏற்பட்டுள்ள இன்னல்களை புதிய முறையிலே போக்கிவிடுவதாக சந்திக்கு சந்தி வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாய்ப் பந்தலிட்டு வருகின்றது. [illegible] மலையகத் தமிழ்த் [illegible]ழிலாளர் வர்க்கத்தை அழித்தொழித்து விட, 1947ம் ஆண்டிலேயே வழி சமைத்தவர்களுக்கு ஆலவட்டம் வீசுவதும் இக் கட்சிதான்.

உள்ளூர் மக்களுக்குத், துரோகம்!

வெளி வாழ் மக்களுக்கும் துரோகம்!

இத்தகைய இனத் துரோகச் செயலைத் தொடர்ந்து தொழிலாக ஏற்று நடாத்தி வரும் இவர்கள் தமிழ்த் தாயின் பேரிலே, தமிழ் மொழியின் பேரிலே தமிழ் பேசும் மக்களின் தயவை நாடி விநோத விளையாட்டுக்களை விளையாடுகின்றனர்.

#### நாடறிந்த உண்மை

தமிழ் மொழியைக் காத்து தமிழ் பேசும் இனத்தை இணைத்து பிரதேசத்தை பிறர் அபகரிக்காது காப்பாற்றி இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் விடுதலை இயக்கமான தமிழரசுக் கட்சி எத்தனை முற்போக்கான சாத்விகப் போராட்டங்களை நடத்தி வந்திருக்கிறதென்பதை இந்நாட்டு வரலாறு கூறும்.

இப்பெருண்மையை மறைத்துவிட தரக்குறைவான பிரச்சாரங்களில் தமிழ் காங்கிரசு ஈடுபட்டு வருகிறது. நாட்டுத் துரோகம், இனத் துரோகம் இவைகளைச் செய்துவிட்டு 'மொழி காப்போம்', 'உரிமைகளை திரும்பப் பெறுவோம்' என்று கூப்பாடு போடும் இவர்களை தமிழ் பேசும் மக்கள் நம்ப முடியுமா? பேச்சு சுதந்திரம் மட்டும் தமிழ் பேசுவோருக்கு இருக்கின்ற ஒரே காரணத்தைக் கண்ணியமற்ற முறையிலே காங்கிரசு பயன்படுத்தி கன்னித் தமிழுக்குக் குந்தகம் விளைவிக்கும் கடமையிலீடுபட்டுள்ளது வருந்தத் தக்கதே!

**வீ. தர்மலிங்கம்**
**கிளாத் தோட்டம்**

பாதி காலத்தை சுயநலம் தேடும் பணியிலீடுபட்டிருந்து ஓட்டிவிட்டு, தேர்தல் காலம் நெருங்கி வரும் மீதி காலத்தில், தமிழ் பேசும் பெருங்குடியினரின் முன்னே தோன்றி அழிந்து விட்ட விலாசங்களை மீண்டும் புதுப்பித்து எழுதிக் கொண்டும், அறப்போர் அணியாம் தமிழரசுக் கட்சியை, அதன் புனிதத் தன்மை அறியாது தூற்ற முற்படும் தீயவர்களுக்கு மக்கள் 22-ம் திகதி நல்ல பாடம் புகட்டுவார்கள் என்பதுண்மை.

#### இணைப்புப் பாலம்

வடக்கையும், கிழக்கையும், மலையகத்தையும் இணைக்கும் பாலமொன்றை இலங்கைத் தமிழரசுக் கட்சி கட்டி எழுப்பியுள்ள சிறப்பை, உணராது ஏது செய்தனர் தமிழரசார் என்று ஓலமிடுகிறது காங்கிரசு.

மொழியால், இனத்தால், பண்பால், கலாச்சாரத்தால் ஒன்றுபட்ட தமிழ் பேசும் இனத்தின் ஒற்றுமைக்காக, ஒரு நியாயமான, நேர்மையான இயக்கம் தேவை இந் நாட்டிற்கு, என்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சி நிறைவேற்றி வருகிறதென்பதை, உலகமே அறியும். ஆனால் இவ்வியக்கத்தினை தமிழ் காங்கிரசோ தலைகீழ் அரசியல் விமர்சனம் செய்து மக்களின் வெறுப்பையே சம்பாதித்து வருகிறது.

#### அன்னையின் அவலம்

வாழத் துடிக்கும் வண்டமிழ் மக்களை பேதம் செய்து பிரித்துக் கூறுக்கி மாற்றானிடம் மண்டியிட வைக்கும் கைங்கரியத்தைக் காங்கிரசு மட்டும் கைவேற்றுக் கொள்ளவில்லை. காங்கிரசுடன் கொம்யூனிஸ்டுகளும் சமசமாஜிகளும் சேர்ந்து தமிழ் பேசும் இனத்தின் ஒற்றுமைக்கு ஊறு தேடுகின்றனர். அத்துடன் தமிழ் பேசும் இனத்தை ஒழித்துக் கட்ட திட்டங்கள் தீட்டும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சுதந்திரக் கட்சிக்கும் கூட ஆலவட்டம் சுமக்கும் சோதாத் தமிழர்களும் இல்லாமலில்லை.

இவர்களை ஈன்ற அன்னைத் தமிழ் இன்று அவமானப்பட்டு அல்லலுறுகிறாள். அவளின் அடிமைத் தளையை அறுத்தெறிய அயராது போராடுபவர்கள் தமிழரசுக் கட்சியினர் மட்டுமே. கடந்த 15 ஆண்டுகளாகத் தமிழரசுக் கட்சி இந் நாட்டிலே ஆற்றிய பணியைத் தமிழ் பேசும் மக்கள் நன்கு உணர்வர்.

இந்நாட்டில் மொழியுரிமைப் போரில் ஈடுபட்டு உயிரையும், உடலையும், உடமைகளையும் தியாகம் செய்த வேறு ஒரு இயக்கம் இருக்கிறதா? தமிழரசுக் கட்சித் தலைவர்களைத் தவிர வேறு எக்கட்சித் தலைவராவது தாம் அறப்போரில் ஈடுபட்டுப் பெற்ற விழுப் புண்களைக் காட்டினால் தமிழ் பேசும் இனம் அவனுக்குத் தலை வணங்கி, அவனையே தன் தலைவனுக்கத் தயங்கப் போவதில்லை.

துணிந்து இந்தச் சவாலை ஏற்க எவரும் இல்லை. ஆகவே, மொழி காக்கும் வீர மறவர் படைத் தலைவர்களாம் தமிழரசுத் தலைவர்களுக்கே தமிழ் பேசும் மக்கள் தங்கள் பொன்னான வாக்குகளை அளிப்பர் என்பது உறுதியாகி விட்டது.

---

# பொன்னம்பலத்தின் அரசியல் ஞானசூனியம்

—மணாளன்—

தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பறிக்க சிங்கள ஆட்சியாளர் திட்டமிடுகிறார்கள் என்ற உண்மையைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே தந்தை செல்வநாயகம், அமரர் வன்னியசிங்கம் போன்றோர் ஆணித்தரமாக எடுத்துக் கூறினார்கள். அந்த நேரத்தில் சிங்கள ஆட்சியாளரின் செல்லப்பிள்ளையாக இருந்த திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தமிழரசுத் தலைவர்களின் கூற்றை மறுத்துரைத்ததுடன் சிங்கள ஆட்சியைப் பாராட்டி சிந்து பாடினார். அன்று தமிழரசுத் தலைவர்கள் கூறிய கருத்துக்கள் யதார்த்த ரீதியான தீர்க்கதரிசனம் என்பதை நாம் இன்று காண்கிறோம். திரு. பொன்னம்பலம் அவர்கள் அன்று கூறிய கருத்துக்கள் அவரின் அரசியல் ஞானசூனியத்தை அப்பட்டமாக எடுத்துக் காட்டுகிறது.

#### மொழி

"இலங்கை அரசாங்கம் எடுத்து வரும் பாரபட்சமான வகுப்புவாத சட்டமியற்றும் வரிசையில் அடுத்து வருவது இந்த மொழிப் பிரச்சினையாகவே இருக்கப் போகிறது."

தந்தை செல்வநாயகம்
10-12-48, பாராளுமன்ற
பதிவேடு பக்கம் 494)

"சிங்கள மொழியை மட்டும் ஒரே உத்தியோக மொழியாக்குவதற்கு நிர்வ ரீதியாக எத்தனங்கள் செய்யப்படுவதை நானறிவேன்."

கோப்பாய்க் கோமான்
வன்னியசிங்கம்
(சிலோன் ஒப்சேவர்
27-6-49)

"எங்கள் நாடு சுதந்திரம் அடைந்த பின் எம் தாய் மொழியான தமிழைத் தம் மொழியுடன் சமத்துவ நிலையில் வைக்க உடன்பட்ட நம் சிங்கள சகோதரர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியைக் கூற விரும்புகிறேன்."

பாராளுமன்றத்தில்
பொன்னம்பலம்
(பா. பதிவேடு
பக்கம் 1919,
16-3-49 )

"தமிழ் பேசும் இலங்கை மக்களுக்கு எதிராக சேனநாயக்கா அரசாங்கம் 'ஆழமான — திட்டமிட்ட சதி' ஒன்றில் ஈடுபட்டிருப்பதாகத் தலைவர் செல்வநாயகம் அவர்கள் கூறினார்கள். இந்தத் 'திட்டம் இருமுனை கொண்டதாகும்' முதலாவதாகத் தமிழ் பேசும் மக்களின் எண்ணிக்கையைக் குறைக்க ஆசைப்படுகிறார்கள். இந்தக் கொள்கையை அமுல் நடத்தும் முகமாகவே தமிழ் தோட்டத் தொழிலாளியினது குடியுரிமையையும், அவனது வாக்குரிமையும் சேனநாயக்கா அரசாங்கம் பறித்துக் கொண்டது. சேனநாயக்கா அரசாங்கத்தின் திட்டத்தில் இரண்டாவது முனையின் தாக்குதல் தமிழ் பேசும் பிரதேசங்களில் சிங்களவரைக் குடியேற்றுதல். தமிழ் மாவட்டங்களில் சிங்களவரைக் குடியேற்ற அரசாங்கம் இறங்கி விட்டது. தமிழ் பேசும் மக்களின் பிரதேசமான கிழக்கு மாகாணத்தில், கல்லோயாப் பள்ளத்தாக்கில் இத்தகைய குடியேற்றங்களில் முதற் குடியேற்றம் நடைபெற்றது.

இந்து (சென்னையிலிருந்து
வெளியாவது)
(மே 7, 1951)

சித்திரவதை செய்யப்பட்ட தமிழரினது கதைகள்—சமஷ்டிக் கட்சிக் கதைகளிலிருந்து; [illegible] 'இந்த [illegible]ளக் குடியேற்றக்காரர் [illegible] வில் நிரப்பப்படும். அந்த இடத்தைத் தமிழ் பேசும் மக்கள் தங்களுக்கெனப் பாதுகாத்தல் எப்படி என்பது தெரியவில்லை."

Cartoon by Collette in
Observer of March
26th 1951

#### பிரதமர் பிறந்த நாளைக் கொண்டாடினர்

யாழ்ப்பாணத்தில் மாபெரும் கொண்டாட்டம்

"நாங்கள் உங்களோடு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி உங்களின் காணி, நீர்ப்பாசன, குடியேற்றக் கொள்கைக்கு நாங்கள் ஒத்துழைப்போம்" என்று கை தட்டலுக்கிடையே திரு. பொன்னம்பலம் கூறினார்.

Ceylon Daily News
(October 21, 1950)

#### தமிழ் பல்கலைக் கழகம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்க வருடாந்த விருந்தில் முக்கிய விருந்தாளியாகக் கலந்து கொண்ட கௌரவ கைத் தொழில் ஆராய்ச்சி, மீன்பிடி அமைச்சர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் மொழியடிப்படையில் இரண்டு பல்கலைக் கழகங்கள் நிறுவ வேண்டும் என்று சேர். ஐவர் ஜெனிங்ஸ் கூறிய கூற்று 'காலத்துக்கு ஒவ்வாத போலித் திட்டம்' என்று வன்மையாகக் கண்டித்தார். சேர் ஐவர் பிரச்சினைக்குரிய விசயத்தைக் கிளறிவிட்டிருக்கிறார். பல்கலைக் கழகத் துணைவேந்தரால் காட்டப்பட்ட பாதையை இலங்கை பின்பற்றுமானால் இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டைக் காப்பாற்ற முடியாது' என்று அமைச்சர் மேலும் சொன்னார்.

C. D. N. (March 19, 1952)

#### வட, இலங்கைத் துறைமுகம்

"வட இலங்கைத் துறைமுகம் ஒன்றைப் பிரயாணப் போக்குவரத்துக்குத் திறப்பது விரும்பத்தக்கதா இல்லையா என்பதைப் பற்றியே இப்பொழுது சிலரிடையே கிளர்ச்சி நடந்துவருவதாகத் தோன்றுகிறது. வட இலங்கைத்துறைமுகமொன்றைப் பிரயாண போக்குவரத்துக்குத் திறந்து விட்டால் இப்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து தலைமன்னார், தனுஷ்கோடி ஆகிய இடங்களின் வழியாகச் சுற்றி வளைத்துக் கொண்டு இந்தியா போகும் சில பிரயாணிகளுக்கு நேரடியாக இந்தியா போகும் வசதி ஏற்படும் என்பது உண்மைதான். அதே சமயம் இந்த யோசனையினால் அரசாங்கத்திற்கு ஏற்படக் கூடிய பெரும் பணச் செலவையும் தென்னிந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் பொதுவாக இலங்கையின் இதர பாகங்களுக்கும் தொற்று நோய்கள் பரவக் கூடிய ஆபத்துக்களையும் நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்." திரு. பொன்னம்பலம்.

வீரகேசரி (25-8-49)


**'சுதந்திரன்'**
**புதிய சந்தா விபரம்**

ஒரு வருடம் ரூபா 14-00
ஆறு மாதம் ரூபா 7-50

நிர்வாகி
'சுதந்திரன்'



**சம்மாந்துறையில்**
**சுதந்திரன்**
கிடைக்குமிடம்
கதிஜா நியூஸ் ஏசன்சிஸ்,
கிரவுன் பிளேஸ் கட்டிடம்
(ஈஸ்டேன் தியேட்டருக்கு
அருகாமையில்)
சம்மாந்துறை.



**நிந்தாவூரில்**
**சுதந்திரன்**
கிடைக்குமிடம்
அமீனியா ஸ்டோர்ஸ்,
மார்க்கட்,
நிந்தாவூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்காளர் சிந்தனைக்கு

# போலிகளும் பொய்யர்களும் ஒழிக,

# வளமார் தமிழினத்தின் வாழ்வு வளம் பெற

# வழி சமையுங்கள்

## சுதந்திரக் கவிக் குயிலின் கீதம்

## உங்களுக்கு வழி காட்டட்டும்

மார்ச் 22-ல் தமிழ் பேசும் பொது மக்கள் தாம் பெற்றுள்ள வாக்கை எப்படிப் பிரயோகிக்கப் போகிறீர்கள்? இது ஒவ்வொரு தமிழ் பேசும் வாக்காளரையும் சார்ந்துள்ள மாபெரும் பொறுப்பு. 'நிதானத்தையும், தீர்க்கமான தீர்மானத்தையும் உபயோகித்து எதிர்காலத் தலைவிதியை—வருங்கால சந்ததியின் வாழ்வை தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை ஒவ்வொரு தமிழ் பேசும் வாக்காளரும் நன்கு நினைவு படுத்திக் கொள்ள வேண்டும்'

உறவு முறைக்கோ, நேசபாசத்திற்கோ, பிரதேச வேறுபாட்டிற்கோ, மத மாச்சரியங்களுக்கோ இது சந்தர்ப்பமல்ல. இயக்க ரீதியாக கொள்கையடிப்படையில் சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய நேரம் இது. வாக்குரிமை என்ற மகத்தான அந்தச் சக்தியைப் பயன்படுத்த முன்னர் உள்ளத்தில் தெளிவை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

தேர்தல் அரங்கில் நிற்கும் ஒவ்வொரு வேட்பாளரையும், அவர் சார்ந்திருக்கக் கூடிய இயக்கத்தையும் நன்கு எடை போட வேண்டும். எமது துயர் துடைக்கும் திறன் யாரிடமிருக்கிறது—யாருக்கு வாக்களித்தால் எமது அடிமை வாழ்வு நீங்கி விடுதலை காண முடியும் என்பதை ஒவ்வொரு வாக்காளனும் நன்கு தீர்மானிக்க வேண்டும்.

இம்முறை தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை வேண்டி நிற்பவர்கள்: சுயேச்சைவாதிகள், இடதுசாரிக் கூட்டணியினர், ஐக்கிய தேசியக் கட்சியினர், தமிழ் காங்கிரசார், தமிழரசுக் கட்சியினர். இவர்களைப் பற்றி ஒவ்வொரு வாக்காளரும் ஓரளவு தெரிந்து கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

### சுயேச்சை வாதிகள்

சுயேச்சை வாதிகள். இவர்கள் அரசியல் அரங்கில் செல்வாக்கற்ற செல்லாக் காசுகள். எதையும் சாதிக்கக் கூடிய சக்தியோ, திறனோ அற்றவர்கள். தங்கள் சுய இச்சையைப் பூர்த்தி செய்து கொள்வதற்கு எதையும் செய்யக் கூடியவர்கள். கொள்கை, இலட்சியம், கோட்பாடு எதுவும் அற்ற கட்டாக்காலிகளான சுயநலப் பிண்டங்கள். அரசியல் ஆய்வாளர்களால் மூன்று தலைக் கழுதைகள் என்று வர்ணிக்கப்படுபவர்கள். கடந்த பாராளுமன்றக் காலத்தில் கொலு வீற்றிருந்த சுயேச்சை பிரதிநிதிகள் சாதித்தது என்ன? அடக்கியாண்ட இராணுவத் தளகர்த்தர்களுக்கு சிந்து பாடி தமிழினத்தின் உரிமைப் போராட்டத்துக்கு குந்தகம் விளைவித்ததைத் தவிர இவர்கள் உருப்படியாகச் சாதித்தது எதுவுமேயில்லை.

சுயேச்சை வாதிகளினால் எமது விடுதலைப் போராட்டத்தை வழி நடத்த முடியாது. சுயேச்சை வாதிகளுக்கு நாம் கொடுக்கும் வாக்குகள் பெறுமதியற்றவையாகவே கணிக்கப்படும். ஆகவே, சுயேச்சை வாதிகளுக்கு எந்தத் தமிழ் வாக்காளனும் வாக்களிக்கப்போவதில்லை.

### இடதுசாரிக் கூட்டணியினர்

அடுத்து எமது கவனத்துக்குரியவர்கள் இடதுசாரிக் கூட்டணியினர். இக் கூட்டணியினர் யார்? சம அந்தஸ்தும், சமத்துவமும் பேசி—அவற்றையெல்லாம் காற்றில் பறக்கவிட்டு; இன்று சுண்டியெடுத்த வகுப்புவாதிகளான சுதந்திரக் கட்சியினருடன் இணைந்து தமிழ் பேசுமினத்தை ஒழித்துக் கட்ட கங்கணம் கட்டி நிற்பவர்கள். தமிழ் அரசாங்க ஊழியர்களை பழிவாங்கும் குழுவினர். தமிழ் பேசும் மக்களில் ஒரு பகுதியினரான மலையக மக்களை நாடு கடத்த ஒப்பந்தம் எழுதியவர்கள்.

தென்னிலங்கையில் ஒன்றும் வடஇலங்கையில் பிறிதொன்றும் பேசும் நிலையற்றவர்கள். வட இலங்கையில் பேசியவற்றை தென்னிலங்கை சென்றதும் மறந்துவரைக்கும் வீரர்கள். சிங்கள ஏகாதிபத்தியத்தை தமிழ் பேசும் மக்கள் மீது திணிக்க முனையும் தூதர்கள்.

இக்கூட்டணியின் வேட்பாளர்களாகப் போட்டியிடுபவர்கள் யார்? உதாரணத்துக்கு ஒன்று. கோப்பாய்த் தொகுதியில் போட்டியிடும் இக் கூட்டணியின் வேட்பாளர் அரசாங்க சேவையில் இருந்த பொழுது தினவரவு ஏட்டில் சிங்களத்தில் ஒப்பமிட்டவர். தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் தனியியக்கம் கண்ட பொழுது தனித்து நின்றவர். இவர்கள் தான் கூட்டணி வேட்பாளர்கள். தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள கோடரிக்காம்புகள்.

சத்தியாக்கிரக நேரத்தில் அரிசி கொடுத்து போராட்டத்தை முறியடிக்க முனைந்தவர்கள். அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்த பொழுது இராணுவ வீரர்களுடன் ஒத்துழைத்து மறத்தமிழ் தொண்டர்களை நையப்புடைப்பதில் முன்னின்றவர்கள். சிறிமாவோ அம்மையாரால் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டவர்கள். இவர்களுக்குக் கொடுக்கும் வாக்குகள் ஒவ்வொன்றும் சிறிமாவோவின் கையைப் பலப்படுத்தவே உதவும். மானமே உயிரெனக் கொண்டு வாழ்பவர்கள் தமிழர்கள். எனவே ஏக சிங்களச் சிந்துபாடும் சிறிமாவின் வேட்பாளர்களுக்கு நிச்சயம் வாக்களிக்க மாட்டார்கள்.

### ஐ. தே. கட்சியினர்

ஐக்கிய தேசியக் கட்சியினர். இக்கட்சியின் வேட்பாளர்கள் ஒரு சில தொகுதிகளில் மட்டுமே போட்டியிடுகிறார்கள். இடதுசாரிக் கூட்டணியினர் சுண்டியெடுத்த வகுப்பு வாதிகள் என்றால், இவர்கள் [illegible] வகுப்பு வாதிகள். தமிழ் பேசும் மக்களை [illegible] சாகடிக்கும் நஞ்சு உள்ளத்தினர். ஏக சிங்கள இலங்கையை உருவாக்க நீண்ட திட்டத்துடன் செயலாற்றுபவர்கள். நிச்சயம் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட எவரும் இவர்களுக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

அடுத்து நமது கவனத்துக்குரியவர்கள் சிறுவுக்குச் சிந்துபாடும் கம்யூனிஸ்டுகளும், சமசமாஜ புரட்சிவாதிகளும். இவர்கள் தமிழ் பேசும் மக்களின் உரிமைகள் பற்றி நல்ல மனதுடன் நடந்து கொண்ட போதிலும்; தமிழ் பேசும் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழ் பேசும் மக்களின் தனித் தன்மையை ஏற்க மறுப்பவர்கள். இவர்களால் எமது இருண்ட வாழ்வுக்கு விடிவு காண முடியாது. எனவே உரிமை வேட்கை விஞ்சி நிற்கும் தமிழினம் இவர்களின் தேசிய வாதத்தை ஏற்று வாக்களிக்கமாட்டாது.

### பூங்குன்றன்

### தமிழ் காங்கிரசார்

அடுத்து எமது பார்வைக்குரியவர்கள் அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் என்ற பெயர் கொண்ட பொன்னம்பலம் கட்சியினர். இன்று தமிழ் பேசும் மக்கள் உரிமையிழந்து இரண்டாந் தரப் பிரசைகளாக இந் நாட்டில் வாழ்வதற்கு காரணகர்த்தாக்கள். ஐக்கிய தேசியக் கட்சியுடன் பட்டத்துக்காகவும்பதவிக்காகவும் ஒற்றுமைக் கீதம்பாடி கொஞ்சிக் குலாவி இனத்தின் உரிமைகளை அடகு வைத்தவர்கள். திருவாளர்கள் பொன்னம்பலம், குமாரசாமி போன்றோர் அன்று விட்ட தவறின் காரணமாகவே இன்று சிங்களம் மட்டும் சட்டம் தமிழ் பேசுமினத்தின்குரல்வளையைநசுக்குகிறது. இதை எந்தக் காங்கிரஸ் வாதியாலும் மறுக்கவோ அல்லது மறைக்கவோ முடியாது. இன்று சாத்திரியும்-சிறிமாவோவும் உடன்படிக்கை எழுதி மலையக மக்களை நாடு கடத்துகிறார்கள் என்றால் அதற்கும் மூலகாரணம் இந்தத் தமிழ் காங்கிரசார் என்ற உண்மையைவேதனையுடன் கூறவேண்டியிருக்கிறது.

ஆகவே, தமிழ் காங்கிரஸ் என்ற பொன்னம்பலம் கட்சிக்கு யாராவது வாக்களித்தால் அது தமிழ்த் தாயின் கழுத்தில் தூக்குக் கயிறு மாட்டுவதற்கு ஒப்பானது என்பதை மறந்துவிடக் கூடாது. தமிழ் காங்கிரஸ் கட்சிக்குக் கொடுக்கும் வாக்கும், ஐ. தே. கட்சிக்குக் கொடுக்கும் வாக்கும் எத்தகைய வேறுபாடும் இல்லை. எனவே தமிழ் பேசும் மக்கள் [illegible] சிக்கு வாக்களித்து இனத் [illegible] தேடிக்கொள்ள மாட்டார்கள்.

### இலங்கைத் தமிழரசுக் கட்சியினர்

இலங்கைத் தமிழரசுக் கட்சியொன்றே கட்டுப்பாடான கட்சி ரீதியில், குறிப்பான இலட்சியத்தோடு திண்மையான செயற் திட்டங்களோடு தமிழ் பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களில் இருபது தொகுதிகளில் போட்டியிடுகிறது. அதன் திரட்டப்பட்ட இலட்சியம் தமிழ் பேசும் மக்களின் பிறப்புரிமைகளை நிலைநாட்டல், சுதந்திரத்தையும் சுயநிர்ணயத்தையும் ஈட்டுதல் என்பனவாம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்கள் தியாகத்தில் புடம்போட்டு எடுக்கப்பட்ட தமிழ்த் தொண்டர்கள். [illegible]னத்தின் வாழ்வுக்காக இன்னுயிர் பல உவந்தளித்த இயக்கத்தின் வேட்பாளர்கள் தமிழ் பேசும் இனத்தின் விடுதலைக்காக உடல், பொருள், ஆவி அனைத்தையும் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கும் தியாக சீலர்கள். விடுதலைப் போராட்டங்கள் பலவற்றை நடாத்தித் தடியடியும், பொல்லடியும் பட்டவர்கள் இனத்தின் வாழ்வையே மனதிற் கொண்டு உடல் நலத்தையும், பொருள் வளத்தையும் இழந்தவர்கள். தமிழ் பேசுமினத்தின் ஒற்றுமையையும்—விடுதலையையும் உயிர் மூச்சாகக் கொண்டு செயற்படுபவர்கள். தமிழ் பேசுமினத்தின் வாழ்வும் தாழ்வும் கட்சியின் வாழ்வும் தாழ்வும் என்று எண்ணிச் செயற்படுபவர்கள் தமிழரசுக் கட்சியினர்.

"எங்களுக்குச் சகாயம் வேண்டாம்; சகாயம் பெறுவது ஏளனத்திற்கு இடமாகும். எங்களுக்குச் சலுகைகள் வேண்டாம். பலவீனர்களுக்குத் தான் அது தேவை. எங்களுக்கு வெகுமதிகள் வேண்டாம்; வெகுமதிகள் அடிமைகளுக்குத்தான் உரியன. நாங்கள் வேண்டுவது எங்கள் நீடித்த பிறப்புரிமை. பிறப்புரிமை ஒரு மனிதன் இன்னொரு மனிதனுக்குத் தானம் செய்யும் பரிசல்ல. அது ஆண்டவனுல் அவனுடைய சிருஷ்டிகள் அனைத்திற்கும் வழங்கப்பட்டிருக்கும் ஒரு பெரும் பேறு. இந்தப் பிறப்புரிமையை அடைந்தே தீருவது என்று நாங்கள் உறுதி பூண்டு விட்டோம். நாங்கள் சுதந்திரம் அடைவதை இந்த உலகில் எந்த சக்தியாலும் தடுத்துவிட முடியாது" என்று கூவியது இந்திய சுதந்திரக் கவிக்குயில் கவியரசி சரோஜினி நாயுடு. தமிழரசார் இதுவரை வாழ்ந்து காட்டியதும்—காட்ட விருப்பதும் இதுவே.

எனவே 22ந் திகதி வாக்குச் சாவடியை நோக்கி நடைபோடும் தமிழ் வாக்காளர்கள் அந்தபாரத சுதந்திரக் கவிக்குயிலின் கீதத்தை நினைவு படுத்திக் கொள்ளட்டும். அப்பொழுது, யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்ற தெளிவு ஒவ்வொரு வாக்காளரது உள்ளத்திலும் தோன்றும்.

### வன்னி நாட்டு வீரன்

## ஜீ. பீ. வின்சன்ட்



உடல் வலிமையுள்ளவர்களின் உள்ளம் ஊனமடைந்திருக்கும். உடல் தளர்ச்சி கொண்டவர்களிடம் உள்ளத்தில் உரம் இருக்கும். உடல் வளர்ச்சியைக் கொண்டு ஒருவரை சீர் தூக்கிப் பார்ப்பதானுல் திரு. ஜீ. பீ. வின்சன்ட் உடலால் மெலிந்து காணப்படுவார். ஆனால் உடலின் வாட்டத்தையே ஓட்டிவிடக்கூடிய உள்ள உரம் கொண்டவர். திடகாத்திரமுள்ள தேகத்தைப் பெறுவிட்டாலும் திரு. வின்சன்ட் திடமுள்ள நெஞ்சத்தினர். இனத் தோள்களைப் பெற்றவரல்லாது போனலும் திடமான உள்ளத்தினர்.

தமிழ் அன்னைக்கு சிங்களத்துடன் சரியாசனம் அமைக்கும் பணியில் அறவழிப் போர் புரியும் தமிழரசுக் கட்சி அணியில் திரு வின்சன்ட் முன்னிடம் வகிக்கிறார். வன்னி நாட்டின் காவலரை வரிசைப் படுத்தி அறப்போருக்கு ஆயத்தமாக்கும் அரும் சிறப்புக்கள் அத்தனையும் கொண்டவர். வீர உணர்ச்சியால் உருவாக்கப்பட்ட உதார புருடர் திரு. வின்சன்ட்.

முல்லைத்தீவிலே பிறந்த திரு. வின்சன்ட் ஒரு பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராவார். வட மாகாணத்தில் பல கல்லூரிகளில் ஆசிரியராகப் பணி புரிந்துள்ளார். தமிழார்வம் மிகுந்தவரான திரு. வின்சன்ட் தமிழரசுக் கட்சியில் சேர்ந்து தமிழுக்காகச் சேவை செய்யத் தம்மையே அர்ப்பணித்துள்ளார்.

பல்லாண்டுகளாக தமிழரசுக் கட்சியின் செயற்குழுவில் அங்கம் வகிக்கும் திரு வின்சன்ட் கடந்த 1960-ம் ஆண்டு ஜூலை மாதத்தேர்தலில்தமிழரசு வேட்பாளராக வவுனியாவில் தோற்றினார். அம்முறை அத்தேர்தலில் வெற்றி பெற முடியவில்லையெனினும் இம்முறை தமிழரசுக் கட்சியின் பெருமையையும் தலைவர்களின் நேர்மையையும் வன்னி நாட்டு மக்கள் நன்கு உணர்ந்து கொண்டுள்ளமையினுல் பல்லாயிரக் கணக்கான அதிகப்படி வாக்குகள் பெற்று திரு. வின்சன்ட் வவுனியாவின் பிரதிநிதியாகுவார் என்பது தெளிவாகிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...கர் மொழி காக்க விரைந்த படை பாரீர்!



காவற்படையினரின் கல்லடியும் பொலிசுப் படையினரின் பொல்லடியும், சோதாக் கும்பலின் சொல்லடியும் யாழ்ப்பாணக் கச்சேரி முன்னே தமிழ் காக்கத் திரண்டிருந்த தமிழர் பெருங் கூட்டத்தை தகர்த்தெறிய முடியவில்லை. வெய்யோனின் சீற்றமும், மழையின் கோரமும், பனியின் பாய்ச்சலும் கொள்கை உரமேறிய நன்றுள்ளங்களைக் கூறு செய்ய முடியவில்லை. அன்று யாழ் கச்சேரி வாயிலில் தொடங்கிய அறப்போர் காந்தி அடிகளின் சத்தியாக்கிரக இலட்சியத்துக்கே இலக்கணமாக அமைந்ததென சான்றோர்கள் கூறினரே! உலகமே கண்டு போற்றிய உண்மையான அறப்போரில் கலந்தோர் என்றும் மறவாரே. தமிழரசு சத்தியயுத்தம் நடக்கும் போதினிலே மூலை முடுக்குகளைத் தேடி ஒழிந்து பதுங்கியவர்களின் பசப்பு வார்த்தைகளைக் கேட்டு கொள்கையினை விட்டுக் கொடுக்க எந்தத் தமிழ் பேசும் மகனும் துணிய மாட்டானே!

## அமரர் த. ஏகாம்பரம்



**தோற்றம்: 8-11-1913 மறைவு: 22-3-1961**

சத்தியாக்கிரகப் போராட்டம் வடக்கு கிழக்கு மாகாணங்களில் ...களை ஏகாதிபத்தியத்தை ஸ்தம்பிக்கச் செய்த அந்த வேளையிலே, 23-3-61ல் அமரர் களத்திலே சாய்ந்தார். அமரர் ஏகாம்பரம் அவர் விட்ட பணியை தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்து புரிகின்றனர். தமது உயிருக்கு மேலாக தமிழரசை நேசித்து [illegible]

# சத்தியாக்கிரகக் காட்சிகளை சற்று எண்ணிப் பாருங்கள்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

லிம்களுக்குப் பெரும் அபாயத்தை ஏற்படுத்தும், என்று தமிழரசுக் கட்சியில் சேர்ந்த அன்று குரல் கொடுத்த 'இளம் பெடியன்' மசூர் மௌலானாவை அன்று கேலி செய்தோர் சிலர், இன்றவரால் வளைத்தெடுக்கப் பட்டவர். அன்று அந்தச் சிறு பையன் கூறிய தீர்க்கதரிசன எச்சரிக்கை இன்று கண்களுக்கு முன்னே நடைபெறுவதைக் கண்டதும் தான் முஸ்லிம் மக்கள் தலைவர்கள் எனக் கொள்வோர் அபாயத்தை உணர ஆரம்பித்தனர்.



வன்னிவள நாட்டின் வீர மறவர்கள் வவுனியா கச்சேரி முன் விடுதலை கீதம் இசைத்துக் கொண்டிருக்கும் காட்சி.

தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட ஒரு முஸ்லிம் தன் மொழியை அரண் செய்யத் தனியான ஒரு ஸ்தாபனம் தேவை என்ற உண்மையைப் பதினைந்து வருடங்களுக்கு முன்னேயே எடுத்துக் கூறிய இளைஞர்—பேராற்றல் மிக்க மேடைப் பேச்சாளர் மசூர் மௌலானா. கல்முனை மக்களின் வாக்குகளை அமோகமாகப் பெற்று முஸ்லிம்களின் குரல் மக்கள் சபையில் ஒலிக்க எழுப்பப்போகும் நன்னாள் வெகுதூரமில்லை. பெருந்தொகை புரட்டுச் செய்து பொய் கூறி பித்தலாட்டங்கள் பலவற்றில் ஈடுபடும் 'பெருந்தலைகள்' புறமுதுகிட்டோடும் தன்மையையும் விரைவில் பார்க்கப் போகிறோம்.

### பொத்துவில்

இந் நாட்டில் வாழும் தமிழ் பேசும் பெருங்குடி மக்கள் மதத்தால் இந்துக்களாகவும் கிறிஸ்துவர்களாகவும் இஸ்லாமியர்களாகவும் இருக்கலாம். ஆனால் அவர்கள் பேசும் மொழியால் அவர்களனைவரும் ஒரே இனத்தவர் என்ற அடிப்படைத் தத்துவத்தைப் பொத்துவில் தொகுதி மக்கள் நன்கு உணர்வர். உற்றவன் உறவினன் என்ற சொந்த விருப்பு வெறுப்புக்களைக் கொண்டு தங்கள் கொள்கைகளை விலை பேசாத மக்கள் வாழும் பூமி.

இனத்தைக் காக்க அறப்போர் தொடுக்கப் பறை அறையும் வேளையிலெல்லாம் ஆயிரக் கணக்கான தொண்டர்களை அணியணியாக அனுப்பி பெருமை கொண்ட பூமி பொத்துவில். வீரர்களும் தீரர்களும் அநீதி கண்டு பொங்கும் மறவர்களும் வாழும் பூமியிலுள்ள மக்கள் தமிழரசுக் கட்சியைத் தங்கள் உயிருக்குயிராக மதிப்பவர்கள். ஆகவே, உண்மை ஊழியரும், உயர்ந்த பண்பாளருமான ஜனாப் எம். எஸ். காதர் தேர்தலில் வெற்றி கண்டு, தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போருக்கு வேகமூட்டுவார் என்பது கண்கூடு.



மன்னார் நகரிலே அறப்போர்க்களம் நோக்கிப் புறப்பட்ட காளையர்—அன்னை மொழியின் அவலம் களைந்திடத் தங்கள் மெய்யிலே காட்டுப் பவனி சென்ற காட்சியை இன்று மறந்து... தமிழ்த் தாயின் புதல்வர்கள் தாயின் மானம் காக்கச் சென்ற இந்தக் காட்சியினைக் கண்டவர்கள் தமிழரசுக்கு மாறாக என்றும் நிற்கத் துணிவார்களோ?



யாழ் கச்சேரி வாயிலில் தாய் மொழி காக்கத் திரண்ட தொண்டரை பொலிசார் பதித்திடு வடுவினை விளக்கும் படம் இது. இவற்றை நேரில் கண்டவர்கள் தமிழரசுக் கட்சியை எப்படி மறக்க முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர்களின் அண்ணா
## தமிழினத்தின் தானைத் தலைவர்

'பெற்ற தாயை, பிறந்த பொன்னாட்டை, நற்றமிழை மறந்தவன் நன்றி கெட்டவனாம். அந்தப் பட்டம் உனக்கு வேண்டாம்! உன் இனத்தவர் எவருக்குமே ஏற்பட்டுவிட வேண்டாம்! அதற்கு இடம் கொடுத்துவிடாதே!' என்று கடந்த பதினெட்டு ஆண்டுகளாக ஒரு குரல் முரசறைகிறது.



ஆதிக்க வெறியர்களிடம் அடிபணிந்து ஊமையாய், ஒன்றுக்கும் உதவாத கோழையாய் இருந்த தமிழர் சமுதாயத்தை விடுவிக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றி, அதற்காக அல்லும் பகலும் உழைக்கத் தொடங்கியது அந்தக் குரலுக்குரிய உருவம்.

அன்று அனேகருக்கு எழாத எண்ணம், எப்படி அந்த உள்ளத்திற்கு எழுந்தது? ஏன் எழுந்தது?

தானும் தமிழன் என்ற உணர்வு, இந்த மண்ணுக்குச் சொந்தக்காரன் என்ற நினைப்பு அந்த உள்ளத்தைத் தொட்டதன் காரணமாக இருக்கவேண்டும். உறங்கிக் கொண்டிருந்த உள்ளம் விழித்துக்கொண்டது. உரிமை முரசு கொட்டத் தொடங்கியது.

அந்த உள்ளத்திற்குச் சொந்தக்காரர் யார்? தமிழர் நலன்காக்க, உரிமை பேண முன்னோடியாக வந்தவர் யார்? அவரின் பெயர் என்ன?

வட்டுக்கோட்டை தந்த செம்மல், தமிழ்பேசும் இனத்தின் வீரத் தளபதி இளைஞர்களின் அன்புக்குரிய அண்ணா. அவர்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் வட்டுக்கோட்டைத் தொகுதியின் தமிழரசுக் கட்சி வேட்பாளருமாகிய திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்.

இலங்கைப் பல்கலைக் கழகத்திலே பட்டம்பெற்று, சட்டக்கல்லூரியிலே வழக்குரைஞர் பரீட்சையில் சித்தியெய்தி நாளும் பொழுதும் தமிழ் காக்கும் பணிக்கு தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள்.

'காதலிலே கவிதையிலே காளைபோகும் பேச்சு; கணவனுக்கும் மனைவிக்கும் அதுவே தம் மூச்சு' என்ற கவிஞரின் கூற்றுக்கு ஏற்ப துணைவியாரை மட்டுமல்ல செல்வன் காண்டீபனையும் தமிழ் காக்கும் பணிக்கு அர்ப்பணித்துள்ளார் என்றால் தவறாகாது.

ஆரம்பகாலம் முதல் தந்தை செல்வாவின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவர் திரு அமிர்தலிங்கம்.

தமிழ்பேசும் இனத்தின் விரோதிகளுக்கும் துரோகிகளுக்கும் திரு. அமிர்தலிங்கம் என்றால் குலை நடுக்கம். அமரர் வன்னியசிங்கத்தைக் கண்டு அஞ்சிய மாற்றுக் கட்சியினர் இன்று திரு. அமிர்தலிங்கத்தைக் கண்டு நடுங்குகிறார்கள்.

தமிழ்பேசும் இனத்தின் இன்னல் துடைக்கும் பணியில் பலதடவைகள் சிங்களக் காடையர்களினதும் பொலிசாரினதும் பொல்லடிக்கும் தடியடிக்கும் இலக்காகியுள்ளார். இவற்றின் பயனாகப் பல அழியா விரவடுக்களையும் பெற்றுள்ளார்.

'சொல்ல வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை இகல்வெல்லல் யார்க்கும் அரிது' என்ற குறள்கூறும் இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்குபவர் திரு. அமிர்தலிங்கம் அவர்கள்.

இத்தகைய வல்லவரை, நல்லவரை, சொல்லாளரை, செயலாளரை தமது பிரதிநிதியாகப் பெற்றமைக்கு வட்டுக்கோட்டைத் தொகுதி மக்கள் பெருமைப்படுகிறார்கள். இலட்சோபலட்சம் வாலிபர்களின் அணிவகுப்புக்கு தானைத் தளபதியாக விளங்கும் திரு. அ. அமிர்தலிங்கம் தமது வெற்றியில் ஒரு சாதனையை நிலைநாட்டுவாராக.

—பூங்குன்றன்

# முன்விட்ட குறையை . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

### கொடிப் பிரச்சினை

திரு பொன்னம்பலம் சிங்கள மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுக் கொண்டு பெரிய சேனநாயக்காவின் செல்லப்பிள்ளையாக இருந்த காலத்திற்தான் தமிழர்களது முக்கிய பிரச்சினைகளில் ஒன்றான கொடிப் பிரச்சினை தீர்த்துவைக்கப்பட்டது.

சனவரி 1948ல் திரு சுந்தரலிங்கம் கொடிபற்றிய விவாதத்தில் பேசும் பொழுது, 1 : 3 : 1 விகிதம், மஞ்சள், பச்சை, சிவப்பு, வெள்ளை நிறத்தில் சிவப்புக் கேட்டின் மத்தியில் பச்சையில் சிங்கத்தின் உருவம் பொறித்த கொடியை எல்லோரும் ஏற்கலாம் என்று சிபாரிசு செய்தார்.

திரு. பொன்னம்பலம் சீறிப் பாய்ந்தார்—வர்த்தக அமைச்சர் சுந்தரலிங்கத்தின் மீது!

'சிங்கக் கொடிதான் வேண்டும், சிங்கக் கொடிதான் வைத்திருப்போம். வேறெந்தக் கொடியும் வேண்டாம் என்று ஒருவர் கூறுவது மிகவும் நல்லது. இந்தப் பிரச்சினையை மூடி மறைக்க எத்தனிப்பது வீண் வேலை. வர்த்தக அமைச்சரால் சிபாரிசு செய்யப்பட்ட கொடியை, அதன் மாதிரிப் படம் இதோ என் கையில் இருக்கிறது. இந்தச் சபையின் எந்தப் பக்கத்தில் வைத்துப் பார்க்கும் பொழுதும் அதை ஒரே ஒரு பேரால மட்டும் தான் தெரிந்து கொள்ளலாம். அது என்ன வென்றால் 'இது தான் சிங்கக் கொடி.'

1948ல் சிங்கக் கொடிமீது சீறி விழுந்த பொன்னம்பலம் அமைச்சரான பின்னர் அதை விடக் கேவலமான சிங்கக் கொடியை 1 : 1 : 5, விகிதத்தில் பச்சையும், மஞ்சளும் கோடுக்கு வெளியே ஏற்றுக் கொண்டார். திரு பொன்னம்பலத்தின் சிங்கக் கொடியைப் பற்றி திரு சுந்தரலிங்கம் 1950ல், என்ன சொன்னார் தெரியுமா?

"50 : 50 பற்றி அப்பொழுது தீவிரமாக இருந்த திரு. பொன்னம்பலத்தின பிடிவாதம் மட்டும் இல்லாதிருந்தால் நான் சிபாரிசு செய்த கொடியைப் பிரதிநிதிகள் சபை ஏற்றுக் கொள்ளக் கூடிய சாத்தியம் இருந்திருக்கும்......

"திரு பொன்னம்பலம் அவர்கள் இலங்கையில் [illegible] இந்தியத் தமிழர்களுக்கும், இலங்கை இந்தியக் காங்கிரசுக்கும் எழுத்தில் கொடுத்த உறுதிமொழிகளை எப்படிக் கௌரவித்தார் என்பதை இலங்கை மக்கள் நன்கு அறிவர். சிறிலங்கா கொடி பற்றி யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு அவர் பெற்றுக் கொடுத்த 'கௌரவமான சமாதானம்' பற்றியும் இலங்கை மக்கள் வெகு விரைவில் அறிந்து கொள்ளப் போகின்றனர். இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தின்கீழ் இலங்கைத் தமிழர்களை முறைகேடான குடிமக்களாக ஆக்கும் கைங்கரியத்தை அவர் ஏற்கனவே செய்து விட்டார்.

"திரு ஜி. ஜி பொன்னம்பலத்தின் கடைசிக் கொடிக் குத்துக்கரணம் இலங்கைத் தமிழர்களுக்கு சமமதமானதும், விருப்பமானதுமான செயல் எனப் பொன்னம்பலம் தொடர்ந்து பாசாங்கு செய்வதற்குமுன் எந்தவொரு பாராளுமன்ற தொகுதியிலாவது, இலங்கைத் தமிழர்களது கருத்தையும் விருப்பத்தையும் அறியுமுகமாக ஒரு தேர்தல் நடாத்துமாறு நான் ஆலோசனை கூறுகிறேன்' (சிலோன் ஒப்சேவர்—4-3-50)

திரு பொன்னம்பலம் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்ட வலது காலில் வாளேந்திய சிங்கக் கொடியை செனட்டர் எஸ். நடேசன் (கொடிக்குழு உறுப்பினர்) ஏற்க மறுத்து, மாறுபட்ட அறிக்கை சமர்ப்பித்தார்.

அது மட்டுமல்ல, தமிழ் யூ. என். பிகளான சோ அருணாசலம் மகாதேவா, எஸ். ஆர் கனகநாயகம், சி. பொன்னம்பலம் (யாழ்.மேயர்) போன்றோர் சிங்கக் கொடியை தமிழ் மக்கள் கண்டிப்பாக ஏற்க மாட்டார்களென்று கொடிக்குழுவின் முடிவைக் கண்டித்தனர்.

### தீர்வுக்கு உதாரணம்

ஒற்றையாட்சி அரசியல் திட்டத்தின் கீழ், சிங்களவர்களது நல்லெண்ணத்தோடு திரு பொன்னம்பலம் கொடிப் பிரச்சினையை தீர்த்து வைத்த இலட்சணம் இது இப்படி இருக்கும் பொழுது, ஏனைய பிரச்சினைகளிலும் அவரது தீர்வு எப்படி இருக்கும் என்பதை சொல்லவா வேண்டும்?

தமிழர்களின் பிரச்சினைகளிற்குத் தீர்வுகாண இன்னும் இரண்டு வருட தவணை கேட்பது, அந்த இரண்டு வருடத்திற்குள் 'தமிழ் சாதியை' முன்விட்ட குறையையும் சேர்த்து தீர்த்த கட்டத்தான் என்பதை தமிழ் மக்கள் மறந்துவிடக் கூடாது.

போராட்டம் கூடாதென்று கண்டிக்கும் பொன்னம்பலம், கிண்டல் செய்யும் பொன்னம்பலம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை ஒரு முறை படிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

"இந்த வழியில் ஒரு திருப்திகரமான தீர்வு ஏற்படாவிட்டால் பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்ட பொருத்தமான போராட்டங்களில் ஈடுபட்டு எமது உரிமைகளைப் பெறுவோம்." (தமிழ் காங்கிரஸ் விஞ்ஞாபனம்)

அரசியலில் பொன்னம்பலம் 15 ஆண்டுகள் பின் தங்கி நிற்கிறார்! ஐயோ பாவம் எங்கள் ஆழ்ந்த அனுதாபம்!

### கவலற்க

"பாராளுமன்றத்துக்குச் செல்வது என் உடல் நலத்தையும், பண வருவாயையும் பாதிக்கக் கூடிய ஒரு காரியமாகும். சட்டத்தொழிலையுஞ் சரிவரச் செய்வதற்கும் இதனால் வாய்ப்பில்லாமற் போய் விடுகிறது"


திரு பொன்னம்பலம்
(வீரகேசரி—8-3-65)

பொன்னம்பலம் அவர்களே! உங்கள் உடல் நலம் குறைவதையோ, பண வருவாய் வற்றுவதையோ, தொழில் கெடுவதையோ யாழ்ப்பாண தொகுதி மக்கள் பொறுக்க மாட்டார்கள். 1960லும் இரு முறை இதே காரணங்களுக்காக உங்களை வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள் மார்ச்சு மாதம் 22ந் தேதியும் நன்றியோடு உங்களை மீண்டும் வீட்டுக்கு அனுப்பி வைப்பார்கள்! கவலற்க!!

### 'வேண்டாம் கவலை'

'சிங்களக் கட்சிகளின் சமநாயகம், சர்வாதிகார விரோதம், மார்க்சிய விரோதம் ஆகிய கொள்கைகளைக் கொண்ட,..... எக்கட்சியுடனும் ஒத்துழைப்பேன்' என்று த. கா. தலைவர் திரு. பொன்னம்பலம் கூறியுள்ளார்.

'ஏன் உங்களுக்கு இந்தக் கவலையெல்லாம். நீங்கள் யாருடனும் சேர வேண்டாம். அதுபற்றி மூளையைக் குழப்பவும் வேண்டாம். அதற்கெல்லாம் இம்முறையும் இடம்வைக்க மாட்டார்கள் யாழ்ப்பாணத் தொகுதி வாக்காளர்கள்!



வடக்கே வெருகல் முதல் தெற்கே பொத்துவில் வரை [illegible] மக்கள் தமிழ் காக்கும் பணியில் வேற்றுமைகளைத் தையும் மறந்து சத்தியாக்கிரகம் [illegible] இணைந்து நின்று அறப்போர் புரிந்த காட்சியை பணக்கண் முன்னே நிறுத்திப் பார்க்கும் மட்டக்களப்பு மாதாவின் மைந்தர் எவராவது தமிழரசுக் கட்சிக்கு மாறாக நிற்கத் துணிவாரா?

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுவிட்சர்லாந்தில் சமஷ்டி இணைப்பாட்சி

— ஈழத்தரசன் —

ஐரோப்பாக் கண்டத்தில் ஜெர்மனி, பிரான்ஸ், இத்தாலி, ஒஸ்திரியா, யூகோசிலேவியா ஆகிய முக்கியமான நாடுகளுக்கிடையில் ஆக பதினாறாயிரம் சதுர மைல் பரப்புடைய நாடாக விளங்குகிறது சுவிட்சர்லாந்து. மிக முக்கியத்துவம் வாய்ந்த நாடுகளுக்குள் அமுக்கப்பட்டுக் கிடக்கும் இச்சின்னஞ் சிறு திட்டு கடந்த இரு உலக மகாயுத்தங்களுக்குள்ளும் எந்த நாட்டையும் சாராது ஏகாந்தமாக எதுவித சஞ்சலமுமின்றி வாழ்ந்திருக்கிறது என்றால் ஆச்சரியம் மேலிடாமலிருக்க வொண்ணுது.

அறுநூற்றைம்பது வருடங்களுக்கு முன்னர் தோன்றிய சுவிட்சர்லாந்து நாடு சமாதானத்தையும் தனி மனித சுதந்திரத்தையும் சனநாயகப் பண்பையும் கட்டிக்காத்து கவலை எதுவுமின்றி தலை நிமிர்ந்து நிற்கிறது. விவசாயத் துறையில் மேம்பட வேண்டிய இந்நாடு கைத்தொழிலிலும் தலை சிறந்து விளங்குகிறது.

## ஜெனீவா நோக்கி...

உலக சமாதானத்தை நாடும் ஊழியர்கள், கொடிய அணு ஆயுதங்களை ஒழிக்கப் பாடுபடும் தொண்டர்கள் தங்கள் மாநாடுகளைக் கூட்ட சுவிட்சர்லாந்து நாட்டை நோக்கி ஓடுகின்றனர். இதற்கான அடிப்படைக் காரணம் என்ன? உலக சமாதானத்தை விரும்புவோர் சுவிட்சர்லாந்திலுள்ள ஜெனிவாவை நோக்கி ஓடுகின்றனரென்றால் அங்கே சமாதானமும் சகோதரத்துவமும், சுதந்திரமும், சனநாயகமும் தலை சிறந்து விளங்குகின்றது என்பது தான் பொருள். இந்தச் சீரிய பண்பு இந்நாட்டுக்கு மட்டும் ஏற்படுவானேன்?

சுவிட்சர்லாந்து நாடு தன்னை ஆளுவதற்கு ஏற்படுத்திக் கொண்ட ஆட்சி முறைதான் இதற்கு முழுமுதற் காரணமாகும்.

பல நாடுகளுக்கு மத்தியில் இந்நாடு இருப்பதனால், சூழப்பட்டுள்ள நாடுகளினைத் தினது கலை கலாச்சாரம், பண்பு, மொழி, மதம் ஆகிய சகலமும் இந்நாட்டிற்குள் செல்வாக்குப் பெறுவது இயற்கையே. ஆகவே இந்நாட்டினுள் ஜெர்மனியா, பிரெஞ்சுக்காரர், இத்தாலியர், உரோமானியர் ஆகிய நான்கு வகையினரும் புகுந்தனர்.

### நான்கு இனத்தவர்

நான்கு வெவ்வேறு மொழியினைப் பேசும் நாலு சாதியினரும் தத்தமது மொழியையும் தங்கள் தனித்துவம் பெற்ற மதம், கலை, கலாச்சாரம், பண்பாடு முதலிய வற்றைத் தனியாகவே வளர்க்க வழிவகை செய்து கொள்ளும் ஆட்சி அமைப்பை அமைத்ததே இந்நாட்டின் சகோதரத்துவ சமதத்துவ வாழ்க்கை நிலை பெற வழி கோலியது.

72 சத விகித ஜெர்மன் மொழி பேசுவோரும், 20 சதவிகித பிரெஞ்சு மொழி பேசுவோரும், 6 சதவிகித இத்தாலிய மொழி பேசுவோரும், இரண்டு சதவிகித உரோமானிச மொழி பேசுவோரும் இணைந்து வாழ சமஷ்டி முறை இணைப்பாட்சியையே மேற் கொண்டனர்.

சமஷ்டி அமைப்பிலேயே தங்கள் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையை நிலைநாட்டி இன்பமாக வாழும் சுவிட்சர்லாந்து மக்களின் முன் மாதிரியை இரு மொழி பேசும் மக்கள் வாழும் இலங்கை மக்கள் ஏன் ஏற்றுக் கொள்ள முடியாது?

### மதத்துக்கும் தனித்துவம்

மொழிக்கான பிரிவுகளைக் கொண்ட தனித்துவ ஆட்சி முறை தவிர மதத்துக்காகவும் இங்கு சமஷ்டிப் பிரிவை அனுமதித்துள்ளனர். 57 சதவிகிதத்தினர் புரட்டஸ்தாந்து மதத்தையும், 43 சதவிகிதத்தினர் உரோமன் கத்தோலிக்க மதத்தையும் பின்பற்றி வாழ்கின்றனர்.

இனச் சண்டையோ, மொழிச் சண்டையோ மதச் சண்டையோ எதுவுமின்றி இந்நாடு உலகத்து நாடுகளுக்கு ஓர் ஒப்புயர்வற்ற சமுதாயமாகத் தோன்றுகிறது.

நான்கு மொழிகளுக்கு சமத்துவமளித்து, (2 சதவிகிதத்தினரான உரோமானிசியர் உட்பட) இணைப்பாட்சி கண்டு வாழும் மக்கள் சமஷ்டி முறையால் தங்கள் நாட்டை நான்கு கூறுகளாகப் பிரிக்கவில்லை. ஒரே சமுதாயமாக இந்நாட்டவர் வாழ்கின்றனர்.

இத்தனைக்கும் இந்நாட்டினுடைய விஸ்திரணம்—ஆக 16000 சதுர மைல்.

இலங்கையின் விஸ்திரணம்—25000 சதுர மைல்; சுவிட்சர்லாந்து இலங்கையைவிட மூன்றில் இரு பங்கு அளவுடையது.

சுவிட்சர்லாந்தில் வாழும் மக்கள் தொகை—ஆக 47 14000. இலங்கையின் மொத்த சனத்தொகை சற்றேறக்குறைய ஒரு கோடி 10 இலட்சமாகிறது.

சுவிட்சர்லாந்தில் பொருந்தியுள்ள சமஷ்டி ஆட்சி முறை, கனடாவை வளமாக்கிய சமஷ்டித் திட்டம், ருஷியாவை சிறப்பிக்கும் சமஷ்டி ஆட்சி இலங்கைக்கு ஏன் பொருந்தாது என்பதனை அறிவாளிகள், புத்திக் கூர்மை படைத்த திறமைசாலிகள் விளக்குவார்களா?

சமஷ்டிக் கோரிக்கை சிறந்ததல்ல என்று கூறும் 'புத்திசாலிகள்' கூற்று, மக்களைத் தங்கள் மாயை வலைக்குள் ஈர்ப்பதற்காகவேயன்றி உண்மையான வழிகாட்டும் நோக்குடன் அவர்கள் கூறவில்லை என்பதை உண்மை உணர்ந்தவர்கள் தெரிந்து கொள்வார்கள்.




சுவிட்சர்லாந்து

சமஷ்டி அமைப்பினைக் காட்டும் படம்

---

# இன்றைய தமிழ் காங்கிரஸ்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| இலங்கைத் தமிழர் | —15 |
| இலங்கை முஸ்லிம் | — 8 |
| இந்திய வம்சாவழித் தமிழர் | —14 |

அதாவது நியமன உறுப்பினர் உட்பட 101 பா. உறுப்பினர்கள் அடங்கிய சபையில் சிங்களவர் 58 பேரும், சிறுபான்மையினர் 43 பேரும், இருப்பார்கள் என்று சோல்பரிக் குழு கணக்கிட்டது.

ஆனால் 1947ல் நடந்த தேர்தலில் இனவாரியாகக் கிடைத்த இடங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| சிங்களவர் | 68 |
| இ. தமிழர் | 13 |
| இ. முஸ்லிம் | 6 |
| இந்திய வ. தமிழர் | 7 |
| நி. உறுப்பினர் | 6 |
| பரங்கியர் | 1 |
| | 101 |

இந்தியத் தமிழர்களது குடியுரிமை பறிக்கப்பட்டபின் 1952 ல் நடந்த தேர்தலில் இனவாரியாகக் கிடைத்த இடங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| சிங்களவர் | 74 |
| இ. தமிழர் | 13 |
| இ. முஸ்லிம் | 7 |
| இந்திய வ. தமிழர் | 0 |
| நி. உறுப்பினர் | 7 |
| | 101 |

நியமன உறுப்பினர் 7 பேரில் ஒருவர் இ.வ.தமிழர்

### பிரதிநிதித்துவம் தேய்ந்த விதம்

1959ல் அரசியற் சட்டத்தை திருத்தி, மலைநாட்டுத் தமிழர்களை தொகுதி பிரிப்பதற்கு மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்ட பொழுது நிலைமை இன்னும் மோசமானது. சிங்களவரது பிரதிநிதித்துவம் 1947ல் 68 விதமாக இருந்தது; 1960ல் 80 விதமாக உயர்ந்தது! இது பற்றிய விபரத்தை பிறிதோர் சந்தர்ப்பத்தில் விளக்குவேன். ஆனால் 1959ம் ஆண்டு திருத்தப்பட்ட அரசியல் சட்டத்திற்கு சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளது ஆதரவு இருந்த தென்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

சோல்பரி ஒற்றையாட்சித் திட்டம் நிரந்தர சிங்களப் பெரும்பான்மை ஆட்சிக்கு அத்திவாரமிட்டது. குடியுரிமை வாக்குரிமைச் சட்டங்கள் மூலம் சிறுபான்மை மக்களது நிலையை மோசமாக்கினர் பெரிய சேனநாயக்க: அதற்கு ஒத்துழைத்தார் திரு. பொன்னம்பலம்.

1948, 1949 குடியுரிமை, வாக்குரிமைச் சட்டங்கள், கிழ் மாகாணத்தில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் இவற்றின் எதிரொலியே 1956ல் தனிச் சிங்களச் சட்டம்.

1956, 1960ல் நடந்த தேர்தல் முடிவுகளின் புள்ளி விபரத்தையும் பார்த்து விடுவோம்.

| | 1956 | 1960 |
|---|---|---|
| சிங்களவர் | 76 | 124 |
| இ. தமிழர் | 12 | 18 |
| இ. முஸ்லிம் | 6 | 9 |
| இந்திய வ. தமிழர் | 0 | 0 |
| நி. உறுப்பினர் | 7 | 6 |
| | 101 | 157 |

மேலே கொடுக்கப்பட்ட புள்ளி விபரங்களை ஒரே பார்வையில் 1945ல் இருந்து சிங்களவர்—சிங்களவர் அல்லாதார் என்று பார்க்கும் பொழுது எப்படி சிறுபான்மையரது பிரதிநிதித்துவம் தேய்ந்து வந்திருக்கிறதென்பது தெளிவாகப் புலப்படும் அஃது பின்வருமாறு:-

| | | சிங்களவர் | சிறுபான்மை |
|---|---|---|---|
| 1945 | காங்கிரஸ்கோரிக்கை | 50% | 50% |
| | சேனநாயக்கா ஏற்க முன்வந்தது | 55 ,, | 45 ,, |
| | சோல்பரிகுழுத் திட்டம் | 57 ,, | 43 ,, |
| 1947 | பொதுத் தேர்தல் | 68 ,, | 32 ,, |
| 1952 | பொதுத் தேர்தல் | 73 ,, | 27 ,, |
| 1956 | பொதுத் தேர்தல் | 75 ,, | 25 ,, |
| 1960 | பொதுத் தேர்தல் | 80 ,, | 20 ,, |

குடியேற்றம் தடுக்கப்பட்டு, 10 இலட்சம் மலைநாட்டுத் தொழிலாளர்களது கையில் வாக்குரிமையும் இருந்திருந்தால், 1956ல் எந்தவொரு சிங்கள அரசியல் கட்சியும் தனிச்சிங்கள கோசத்தை எழுப்ப, அதைச்சட்டமாக்க நிச்சயம் துணிந்திருக்காது!

ஐம்பதினாயிரம் மலைநாட்டுத் தமிழர்களது வாக்குகள் மட்டும் இன்று மத்திய, ஊவா மாகாணங்களில் உள்ள 23 தொகுதிகளின் 'தலைவிதியை' நிர்ணயிக்கக் கூடியதாக இருக்கின்றன. ஐந்து இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களது கைகளில் மட்டும் வாக்குரிமை இருந்திருந்தால், மொத்தம் எத்தனை தொகுதிகளின் 'தலைவிதியை' நிர்ணயித்திருக்கலாம் என்பதை வாலிபர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

### தமிழர் பலம்

1959ம் ஆண்டு தொகுதி நிர்ணயக்குழு அறிக்கையின்படி மலைநாட்டுத் தமிழர்கள் 25 விழுக்காட்டுக்கு அதிகமாக வதியும் தொகுதிகள் பின்வருமாறு:-

| | |
|---|---|
| மஸ்கெலியா | 77.0% |
| அலுப்பொன | 48.0 ,, |
| அங்குருவெகட்ட | 26.0 ,, |
| கொட்மலை | 56.0 ,, |
| நுவரேலியா | 81.0 ,, |
| பசறை | 56.0 ,, |
| பதுளை | 36.4 ,, |
| சொறணதோட்ட | 44.3 ,, |
| பண்டாரவெல | 50 3 ,, |
| அப்புத்தளை | 59 6 ,, |
| தெகியோவிட்ட | 27 8 ,, |
| பெல்மதுலை | 32 7 ,, |
| இரக்குவானை | 25 6 ,, |
| பலாங்கொடை | 30 6 ,, |
| நிவித்திகலை | 27.2 ,, |
| லக்கல | 27 0 ,, |
| ரத்தோட்டை | 35.7 ,, |
| வத்தகம | 31.0 ,, |
| தெல்தெனியா | 33 0 ,, |
| கம்பளை | 38 7 ,, |
| நாவலப்பிட்டி | 49 3 ,, |
| கொழும்புமத்தி | *31 9 ,, |
| கொழும்புதெற்கு | *25.0 ,, |

*இலங்கைத் தமிழர் உட்பட.

15-25 விழுக்காடு தொகையுள்ள தமிழர்கள் வதியும் தொகுதிகள் சுமார் 18 இருக்கின்றன.

மலைநாட்டு தமிழ் தொழிலாளர்களது குடியுரிமை வாக்குரிமை பறிபோவதன் அரசியல் விளைவை, குடியேற்றத்தின் அபாயத்தை 1949ல் எடுத்துச் சொல்லி அபாய அறிவிப்புக்கொடுத்த ஒரே கட்சி இ. த. அ. கட்சி. குடியுரிமை, வாக்குரிமை, குடியேற்றம் இவற்றின் விளைவு தனிச் சிங்களச் சட்டத்திலும், ஏக பௌத்த சிங்கள ஆட்சியிலும் போய் முடியுமென்று சொன்னவர்கள் - ஆயுட்காலத் தலைவர் அமைச்சராகக் கொலு வீற்றிருந்த காலத்தில்- த. அ. க. தலைவர்கள், அதை அடுத்த கட்டுரையில் காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பிட்டியே! தமிழினம் உனக்கு வணக்கம் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது. ஏன் என்று கேட்கிறாயா?

"கற்பு"க்கு நீ மதிப்பைக் கொடுத்துள்ளாய். பெண்ணின் கற்பை நாம் இங்கு குறிப்பிடவில்லை. 'அரசியற் கற்பையே' குறிப்பிடுகின்றோம். காலத்திற்குக் காலம் வேடம் பல தாங்கும் வேடதாரிகளையும், ஒரு நிலையான கொள்கையைக் கடைப்பிடித்து வாழ்விலும் தாழ்விலும் அதன் வழி நின்று ஒழுகும் உத்தமர்களையும் நீ இனந்தெரிந்துகொண்டாய். நீ தமிழரசு வேட்பாளராம் திரு. ஜெயக்கொடிக்கு வெற்றிமாலை சூட்டத் தீர்மானித்துள்ளது உன் வீரதீரத்துக்கு ஓர் சிறந்த சான்றாகும். உனது துணிச்சலான இந்தத் தீர்மானத்தை ஒரு இம்மியளவேனும் எவராயினும் குறை கூற முடியுமா? — ஏன்?

### கைவரிசையை காட்ட காத்திருக்கின்றனர்

திரு. சிவசிதம்பரம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினராக வந்த பின்பும்கூட காங்கிரசைச் சிற்றன்னை போலவே மதித்து வந்தார் என்பதை யார்தான் மறுக்க முடியும்? தான் ஒரு சிறந்த அரசியல் மேடைப் பேச்சாளனாகத் திகழவேண்டும் என்று விரும்பியதனால் போலும் தமிழரசு மேடைகளிலேறி, சொல்லடுக்குகளை அள்ளி, அள்ளி வீசினார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டதும், மேடை தந்துதவிய தமிழரசுக் கட்சியை, ஒழித்துக்கட்ட வேண்டும் என்று முழங்கினால் சிறுபிள்ளை தானும் அவரை மதிக்குமா?

கொம்யூனிஸ்ட் கட்சியிலே முளைத்து, தமிழ்க் காங்கிரசிலே வளர்ந்து, தமிழரசுக் கட்சி நிழலிலே ஆடிப்பாடி அகங் குளிரும்வரை அனுபவித்துவிட்டுத் திரும்பவும் காங்கிரசிடம் சரண்புகும் அவர் நிலை, வேதளம் முருங்கைமரம் ஏறிய கலதபோலன்றோ!

சிறுபான்மைத் தமிழர் பிரச்சினையிலுங்கூட அவரிடம் உறுதியான கொள்கை கிடையாது. புத்திக்கூர்மையும், பொறுமையுமுள்ள சிறுபான்மை மக்கள் காத்திருக்கின்றனர் தங்கள் கைவரிசையைக் காட்ட!

### திரு. ஜெயக்கொடி

மறுபுறத்தில் திரு. ஜெயக்கொடியைப் பாருங்கள். தமிழர் சுதந்திரப் போராட்டத்திற்குத் தமிழரசுக் கட்சியில் சேர்ந்தார்; வேட்பாளராகப் போட்டியிட்டார்; தோல்வியுமுற்றார். ஆனால், சோர்வுற்று, செயலற்று, சிந்தை நொந்து இருக்கவில்லை. கட்சியின் எல்லா நடவடிக்கைகளிலும் முன்னணியில் நின்று பங்குபற்றினார். இரண்டாம் முறையும் பாராளுமன்றத் தேர்தலில் தமிழரசு வேட்பாளராகப் போட்டியிட்டார்; மறுமுறையும் தோல்வியுற்றார். ஆனால் தோல்விகள் அவரின் சேவை மனப்பான்மைக்கு ஆதரவு நல்கும் தூண்களாக அமைந்ததேயன்றி சலிப்பையோ, சஞ்சலத்தையோ கொடுக்கவில்லை. கட்சிக் கிளைகள் பல அமைத்துக் கட்சியைப் பலப்படுத்தியதின் பலனாக உடுப்பிட்டி இந்த வகையில் ஏனைய தொகுதிகளுக்கு முன்மாதிரியாக விளங்குகின்றது. 1961-ல் நடந்த சத்தியாக்கிரகத்தில் திரு. ஜெயக்கொடி இதய சுத்தியுடன் பூரணமாக உழைத்து, சிறையும் புகுந்தார்.

சமூக ஏற்றத் தாழ்வுகளை அகற்றுமுகமாக ஆரம்பிக்கப்பட்ட பாதயாத்திரையின், உடுப்பிட்டித் தொகுதியும் திரு. ஜெயக்கொடியும் காட்டியுள்ள ஆர்வத்தையும், வகித்துள்ள பாகத்தை

## மக்கள் குரல்

# ஜெயக்கொடி
# ஜெயக்கொடி நாட்டுவார்

யும் உடுப்பிட்டித் தொகுதிச் சிறுபான்மை மக்கள் ஒரு நாளும் மறக்கமாட்டார்கள்.

திரு. ஜெயக்கொடி பாராளுமன்ற உறுப்பினராக இல்லாதிருந்துங்கூட, கட்சியின் வளர்ச்சிக்கும், மீளிர்ச்சிக்கும் அவர்செய்த சேவை அளப்பரியது. அவரின் இந்தத் தன்னலமற்ற சேவையை, இலங்கையின் நாலுபக்கங்களிலிருந்து வந்து திருமலையில் கூடிய கட்சி உறுப்பினர்கள் கௌரவிக்கத் தவறவில்லை. மத்திய செயற்குழுவுக்கு மிகக்கூடிய வாக்குகளைத் திரு. ஜெயக்கொடிக்கு அளித்து அவரையும் உடுப்பிட்டித் தொகுதியையும் கௌரவித்தனர்.

கள்ளங் கபடமற்ற உள்ளத்தைப் பிரதிபலிக்கும் முகமும், படாடோபமற்ற தோற்றமும் உடையவரான திரு. ஜெயக்கொடி உடுப்பிட்டித் தொகுதி மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதில் ஆச்சரியம் எதுவுமில்லை.

லங்கா சமசமாசக் கட்சியின் சார்பில் போட்டியிடும் திரு. தருமரத்தினத்தைப் பற்றி அதிகம் கூற வேண்டிய அவசியமேயில்லை. ஏனெனில் ஏறக்குறைய 30 வருட காலமாக இயங்கிவந்த சமசமாசக் கட்சி தானாகவே மக்களின் ஆதரவையோ, அதிகாரத்தையோ, இன்று பெற முடியாது, 1960-ல் அரசியலில் பிரவேசித்த சிறிமாவின் ஆதரவிலே இயங்க வேண்டிய நிலையிலிருக்கின்றார்களென்றால், தமிழ் மக்களாகிய நாம், எமது உரிமைகளைப் பெற்றுத்தரும் பொறுப்பை சமசமாசக் கட்சியிடமோ அல்லது வேறு எந்த இடதுசாரிக் கட்சியிடமோ எப்படி ஒப்படைக்க முடியும்?

எனவே, உடுப்பிட்டித் தொகுதி வாக்காளர்கள் தமிழரசு வேட்பாளரான திரு. ஜெயக்கொடிக்கே தமது ஆதரவை அளித்து வெற்றிவாகை சூட்டத் தீர்மானித்துள்ளது மிகவும் பொருத்தமானதும் போற்றத் தக்கதுமாகும். அரசியல் வரலாற்றிலே இது பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியது.

—கரவையர்கோன்,
தம்பி,
கரவெட்டி.





அருந்துக
நுவரெலியா

இது சிறந்த பியர் ஏனெனில்:



100 வருட வடிமுறை அனுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.

8 சர்வதேச பரிசுகளைச் சுவீகரித்தது.

இதன் தனிப் பெரும் சுவையின் ரகசியம் தெளிவான, சுத்த நுவரெலிய நீரின் தன்மையேயாகும்.

மேலும் வடிமுறையில் பழுத்த அனுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக [illegible] பில்ஸ்னர் "ஏல்" லாகர்.

சிலோன் புரூவெரி லிமிட்டெட்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயிரம்...... ஆயிரம்......மக்களை அனுதினமும் கவர்ந்து வரும்

# மகத்தான 4வது ஜனத்திரள் வாரம்!

ஒரு ஏழைப் பெண்ணையும், ஆயிரம் ரூபாய் நோட்டொன்றையும் வைத்துக் கொண்டு, புயல் வேகத்தில் சுழன்று செல்லும் உணர்ச்சிச் சித்திரம்!





**சென்ட்ரல்** (மருதானை) **ஈரோஸ்** (பாமன் கடை)

**ராணி** (யாழ்ப்பாணம்) **ராஜேஸ்வரா** (மட்டக்களப்பு) **சீகிரி** (பண்டாரவளை)

**லிபேர்டி** (ஹட்டன்)

ஆகிய திரைகளில்

ஜெமினி கணேசன், சாவித்திரி, எம். ஆர். ராதா, ராகினி, நாகேஷ், சகஸ்ரநாமம், பேபி சாவித்திரி

மற்றும் பலர் நடிக்கும்

# ஆயிரம் ரூபாய்

நடிப்புக்கோர் திலகம் சாவித்திரி என்றால்.........

.........அதை எடுத்துக் காட்டும் படம் "ஆயிரம் ரூபாய்" தான்!



---

**செல்லமஹால்** (கொட்டாஞ்சேனை)

**ரொக்ஸி** (வெள்ளவத்தை) **வின்சர்** (யாழ்ப்பாணம்)

**இம்பீரியல்** (மட்டக்களப்பு)

**நெல்சன்** (திருகோணமலை)

**ரீகல்** (நீர்கொழும்பு) **ரீகல்** (கம்பளை) **கிங்ஸ்** (பதுளை)

ஆகிய திரைகளில்!

## 2வது வாரமாக நடைபெறுகிறது!



**சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி, தேவிகா, சந்திரபாபு, சந்திரகாந்தா, எம். வி. ராஜம்மா, ரங்காராவ்**

முதலியோர் நடித்த

# பந்த பாசம்

டைரக்ஷன்: ஏ. பீம்சிங்

பின்னணி பாடியவர்கள்: சிறினிவாஸ்—சுசீலா—ஜானகி சவுந்தரராஜன்—சந்திரபாபு

---



# வீரம் செறிந்த 3-வது வாரம்

**கெப்பிட்டல்** (கொழும்பு)

**பிளாசா** (வெள்ளவத்தை)

**விஜயா** (மட்டக்களப்பு)

**விஜிதா** (அட்டன்)

**தீவொளி** (நுவரெலியா)

**சீகிரி** (கட்டுகாஸ்தோட்டை)

புரட்சி நடிகர் எம். ஜி. ஆர், (இரு வேடங்களில்) இலட்சிய நடிகர் எஸ். எஸ். ஆர், பானுமதி, பத்மினி, எம். என். ராஜம், தங்கவேலு, கிருஷ்ணன், மதுரம்

மற்றும் பலர் நடித்த

கிருஷ்ணா பிக்சர்ஸ்

# ராஜா தேசிங்கு

## 2-வது மாதம்!

**கிங்ஸ்லி**—**பிளாஸா**—**வெலிங்டன்**

(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)

மற்றும் சில திரைகளில்!

ஜெமினி கணேசன், சாவித்திரி, கே. ஆர். விஜயா, பேபி ஷகிலா, ரங்காராவ்

நடித்த

# கற்பகம்

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1965-ம் வருடம் மார்ச் மாதம் 21-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org